zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

CSS

॥ श्रीः ॥

# ॥ श्रीशिवपराक्रमः ॥

# ஸ்ரீ சிவபராக்ரமம்.

(தமிழ் உரையுடன் கூடியது)

நேமத்தான்பட்டி

ஸ்ரீ ஸுந்தரேசசாஸ்திரிகள்

இயற்றியது.

Copy Right Registerd] [ரூ. 1—0—0

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ted by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

॥ श्रीः ॥

# ॥ श्रीशिवपराक्रमः ॥

# ஸ்ரீ சிவபராக்ரமம்.

(தமிழ் உரையுடன் கூடியது)

நேமத்தான்பட்டி
ஸ்ரீ ஸுந்தரேச சாஸ்திரிகள் இயற்றியது.

விஷயங்கள்

1. ஆலய பஞ்சரத்னம்
2. அபிஷேக பஞ்சரத்னம்
3. ஸௌந்தர்யதேவீ ஸப்தரத்னம்
4. கைலாஸநாதஸ்துதி (64 லீலைகள்)
5. நித்யானுஸந்தானம்

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீவிலாஸ் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

# ॥ अभिनन्दनम् ॥

ராமாயண உபந்யாஸகர்,
K. R. விசுவநாத சாஸ்திரிகள்,
காருடுகாத்தான்.

भक्तेभ्यो भद्रमीशः कलयितुमदधाद्याश्चतुष्षष्टिमूर्ती-
स्तासां दिव्यापदानान्यतिमृदुलपदैः स्रग्धरावृत्तबद्धैः ।
पद्यैर्नातिप्रपंचं शिवभजनपरो व्याहरत्सुन्दरेश-
श्चन्द्रोत्तंसानुभावप्रकटननिरतग्रन्थसंदर्शितानि ॥

1. ஈசுவரன் பக்தர்களுக்கு க்ஷேமம் உண்டு பண்ண விரும்பி எடுத்துக்கொண்ட 64 திருவுருவங்களுடைய திவ்ய சரித்திரங்களை மிகவும் சரளமான பதங்களுள்ள ஸ்ரக்தரா விருத்தத்தில் இசைத்த சுலோகங்களால் சிவாராதனம் செய்யும் சுந்தரேசர் என்பவர் மிகச்சுருக்கமாய் சொன்னார்.

यत्स्वातन्त्र्यं वचस्सु त्रिदशपरिषदो नैपुणी या कवित्वे
यत्प्रावीण्यं पुरारेः सुचरितकथनेऽलंकृतौ चातुरी या ।
पाण्डित्यं शब्दशास्त्रे निरुपममपि यत्पाटवं यत्प्रयोगे
तत्सर्वं राजतीह स्फुटमतिललिते शंकरस्तोत्रराजे ॥

2. தேவஸபையோர்களைப் போல நினைத்தபடி தாமதமன்னியில் சொல்லும் வாக்ஸாமர்த்தியமும் கவி இயற்றுகிற திறமையும் ஈசுவர கதை சொல்லுவதில்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



இருக்கும் அன்பும் அலங்கார சாஸ்திரப் பயிற்சியும் இலக்கணத்திலிருக்கும் வல்லமையும் மனதில் நினைத்த பொருளைச் சொல்லும்படி பதப்பிரயோகம் செய்யும் வன்மையும் மிக ஸரளமான இந்த சிவஸ்தோத்திரத்தில் விளங்குகிறது.

भक्तेः काष्ठां प्रकामं प्रकटयदगजानाथपादाब्जयुग्मे
पद्यानां जालमेतत्पशुपतिचरितादर्शमालोक्य भूयः ।
श्लाघापत्रं ददामि प्रमुदमनवधिं प्राप्तवान्मोदचिह्नं
रामोपाख्यानवक्ता पदनयविदहं विश्वनाथोऽभिनन्दन् ॥

3. ஈசுவரனது திருவடிகளில் மிகவும் பக்தியை உண்டுபண்ணுகிறதும் ஈசுவரனின் சரித்திரங்களைக் கண்ணாடிபோல் விளக்குகிற இந்தச் சுலோகங்களை அநேகந்தடவை பார்த்து எல்லையற்ற சந்தோஷமடைந்த இலக்கண வித்வானான விச்வநாதனென்கிற யான் ஸந்தோஷத்திற்கு அடையாளமான புகழ்ச்சியேட்டை (Certificate) கொடுக்கிறேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



N. N. சிவசுப்ரமண்ய சாஸ்திரிகள்,
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
ஸ்ரீ பூமீசுவர ஹைஸ்கூல்,
ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை.

शब्दार्थालंकृतिभ्यामुपचितमहिमा शोभनोल्लेखयुक्ता
व्याकृत्या भासमाना ललितपदयुता सारभूताऽऽगमानाम् ।
लीलाः षष्टिं चतस्रः स्फुटयति विदुषां मानसे धार्यमाणा
सेयं पद्यावलिर्मे जनयति नितरां संप्रहर्षं कलेव ॥

1. சப்தாலங்காரங்களாலும் அர்த்தாலங்காரங்களாலும் பெருமை தங்கியதும் அழகான கற்பனைகளோடு கூடியதும் இலக்கணம் மிக விளங்குகிறதும் சரள பதங்களை உடையதும் சாஸ்திரத்தின் உட்கருத்தாயும் வித்வான்களால் மனதில் சிந்திக்கப்பெறுகிறதும் ஈசுவரன் செய்த 64 லீலைகளையும் வெளியாக்குகின்ற இந்தச் சுலோகங்கள் சந்திரகலையைப் போலும் கல்வியைப்போலும் எனக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது.

दत्तेयं सुतरां प्रीत्या तुष्टेनामोदपत्रिका ।
सुब्रह्मण्येन विदुषा शिवपूर्वेण सादरम् ॥

2. இந்தப் புகழ்ச்சியானது (Certificate) சிவசுப்பிரமணியர் என்னும் வித்வானால் சந்தோஷமடைந்து அன்புடன் கொடுக்கப்பெற்றது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

॥ श्रीः ॥

# ॥ शिवपराक्रमः ॥

# சிவபராக்ரமம்.

## ॥ मङ्गळाचरणम् ॥

श्रीगणपतये नमः ।

कारुण्याम्भोनिधिर्यो नतजनसकलाभीष्टदाने नितान्तं
निष्णातत्वस्य नित्यं प्रकटनविधये हस्तिराजस्य हस्तम् ।
अङ्गीकृत्यातिदीर्घं जगति विजयते मोदमानो निलिम्पैः
सर्वैः संसेव्यमानो वितरतु कुशलं निस्समो मे स देवः ॥

காப்பு.

1. கருணைக் கடலாயும் ஒப்பற்றவராயும் வணங்கினவர்களுக்கு விரும்பின பொருளை எல்லாம் கொடுக்கிற விஷயத்தில் தன் மிகுந்த திறமையை வெளியிட வேண்டுமென்று கஜராஜனுடைய நீண்ட துதிக்கையை ஸந்தோஷத்துடன் கொடுப்பதற்கு கையாக வைத்துக்கொண்டு ஸகல தேவர்களும் தன்னை ஸேவிக்கும்படி பெருமை பெற்ற விநாயகக் கடவுள் மங்களத்தைக் கொடுக்கட்டும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



श्रीवाग्देवतायै नमः ।

वाचां देवी वचांसि प्रदिशतु मम सा पण्डितानां शिरांसि
श्लाघायै मानसेन द्रुतमभिचलितान्याशु कुर्वन्ति साकम् ।
यद्भासा निर्द्रुता सा तिमिरततिरपि प्राप्य नावासगेहं
त्रैलोक्ये जातभीतिः कचभरमिषतो यां प्रपन्ना चकास्ति ॥

2\. தன் பிரகாசத்தால் இருளையும் அக்ஞானத்தையும் மூன்று உலகங்களிலும் இருக்க இடமில்லாமல் விரட்டினவளும் பிறகு பயத்துடன் தனக்குத் தலைமயிராகத் தன்னிடத்திலிருக்கும்படி செய்தவளுமான வாகீசுவரி, புகழ்வதின் பொருட்டு பண்டிதர்களுடைய சிரஸையும் மனதையும் நடுங்கும்படி செய்கிற வலிமை வாய்ந்த வாக்கை எனக்குக் கொடுக்கட்டும்.

विद्यानामाप्यवेदं न सकृदहमहो श्रीगुरूणां पदाब्जं
सर्वार्थानां प्रदातृ क्षणमपि न मयाऽसेवि नादर्शि जातु ।
स्तोतुं कैलासनाथं मुखरयति च मां सुन्दरीयुक्तमार्याः
भक्तिः पूर्वैः कृता सा भगवति विपुला तन्ममेक्ष्या कृतिः सा ॥

3\. பெரியோர்களே! யான் கல்வியின் மணமென்பதே கொஞ்சமும் அறிந்தவனுமில்லை. சகலமும் அளிக்கும் ஸத்குருவின் திருவடியை இமை நேரமும் ஸேவித்தவனுமில்லை. ஆயினும் பகவானிடத்தில் முன்னோர்கள்செய்த பக்தியால் சுந்தரியம்பாள் ஸமேதரான கைலாஸநாத சுவாமியைத் தோத்திரம் செய்யவெனக்கு ஆவல்மிக்க இந்நூலையெழுதினேன். அன்பர் யாவரும் அங்கீகரிக்கக் கோருகிறேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

॥ श्रीः ॥

॥ श्रीसौन्दर्यदेव्यै नमः ॥

## ॥ आलयपञ्चरत्नम् ॥

## ஆலய பஞ்சரத்னம்.

---

सौन्दर्याम्ब त्वदीयं नवभवनमिदं राजते विश्वमातु-
र्देव्याः सर्वसहाया मणितिलकवन्नित्यमामोददायि ।
यद्द्रष्टॄणां जनानां नयननपि मनो विस्मयेन प्रफुल्लं
तत्तद्देशस्थशिल्पिप्रवरकृतमहाचित्रराशि प्रभाति ॥ १ ॥

*1.* ஹே ஸௌந்தர்ய நாயகியே! உன்னுடைய இந்த புதிய ஆலயமானது உலக மாதாவான பூமி தேவிக்கு நித்யானந்தத்தைக் கொடுக்கும் இரத்தின மிழைத்த திலகம்போல் பிரகாசிக்கின்றது. இதை நோக்கும் மாந்தர்களுடைய மனமும் கண்களும் ஆச்சரியத்தால் பரவசமாகின்றன. இன்னும் அந்தந்த தேசத்திலிருக்கும் சிற்ப வேலைத்தலைவர்களால் செய்யப்பெற்ற உயர்ந்த சித்திரக் கூட்டங்களால் பிரகாசிக்கின்றது.

कामं निर्जित्य योगं दिनमनु दधतं देवकैलासनाथं
द्रष्टॄणां भीममुग्रं स्ववशयदथ तत्सुन्दरं रूपमेत्य ।
नामाङ्गीकृत्य मोदादनुपममिति विभ्राजसे यद्वदार्ये
त्वद्गेहं भाति भासा त्वनुपममहिमोल्लासते सुन्दराम्ब ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



2. பூஜிக்கத் தகுந்த ஹே சுந்தராம்பா! மன் மதனை ஜெயித்து தினந்தோறும் யோகாப்பியாஸம் செய்து பார்க்கிறவர்களுக்குக் கடுமையாகவும், பயங் கரமாயுமிருக்கும் கைலாசநாத சுவாமியைத் தனக்கு வசமாக்கிக் கொள்ளும் அழகிய ரூபத்தை அடைந்து சந்தோஷத்தால் ஒப்பற்றவளென்ற பெயரையும் பெற்று நீ எப்படி விளங்குகின்றாயோ அப்படி உன் னுடைய ஆலயமும் அழகினால் ஒப்பற்றதாய்ப் பிரகா சிக்கின்றது.

दवानां या सुधर्माऽनुपमजननि ते निर्जिता गेहभासा
जीवं मानं च गोप्तुं वियति वरतपश्चिन्तया सा करोति ।
कौबेरी याऽळकाऽपि त्रिभुवनविदिता निर्जिता स्वप्रभोस्त-
न्नाम स्मृत्वाऽथ तथ्यं ह्यमनुत हृदये स्वीयमुक्ताळकत्वम् ॥

3. ஹே ஒப்பிலாவம்பிகையே! தேவர்களுடைய ஸுதர்மையென்னும் சபை உனது ஆலயத்தின் ஒளி யால் ஜெயிக்கப்பெற்று அதிகக்கவலையுடன் ஜீவனையும் மானத்தையும் காப்பாற்றிக் கொள்ள ஆகாயத் திலிருந்து தபசு பண்ணிக் கொண்டிருக்கிறது. குபேர னுடைய அளகாபுரியும் மூன்று உலகிலும் கியாதி பெற்றும் உன் ஆலயத்தின் அழகால் ஜெயிக்கப் பெற்று தனக்கு அரசனான குபேரனுடைய நிந்திக்கத் தகுந்த சரீரத்தை நினைத்து தன் மனதில் தனக்கு ஏற்பட்ட முக்தாலகை (முத்துக்களை தலைமயிரில் தரித்துக் கொண்டவள்) என்ற பெயரை உண்மை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal



பாக (அவிழ்த்து விடப்பெற்ற தலைமயிரை உடைய
வள் என்று) கருதினாள்.

कारुण्यं ते नितान्तं महदिति निगमैरुक्तमद्य स्फुटं मे
लोकान् पापे रतानप्यनुपमजननि त्वं सदाऽनुग्रहीतुम् ।
देवं कैलासनाथं पतिमपि तनयावानयन्ती सभृत्या
कैलासावाससौख्यं जनयसि धरणौ दुर्मतीनामगम्यम् ॥

4. ஹே ஒப்பிலாவம்பிகே! உனது கருணை மிகவும் அதிகமென்று வேதங்கள் ஓதுவது இப்பொழுது தானெனக்குப் புலனாயிற்று. பாபத்தைச் செய்ய ஆவலுள்ள ஜனங்களை யெப்பொழுதும் அனுக்ரகிப்பதின் பொருட்டுத் தனக்குப் பர்த்தாவான கைலாஸ நாத சுவாமியையும், புத்திரர்களான கணபதி, சுப்பிரமணியர்களையும் அழைத்துக் கொண்டு எல்லாப் பரிவாரங்களுடனும் இவ்விடத்தில் வந்திருந்து கொண்டு பாபிகளுக்கு எக்காலத்திலும் கிடைத்தற்கரிய கைலாஸத்தில் வஸிக்கும் சௌக்கியத்தைத் தருகிறாய்.

काले कालेयपापाकुल इह तपसो हेतुकन्दादिभक्ष्यं
कायक्लेशावहं तद्गुरुवरभजनं दुर्बलैर्दुष्करं तत् ।
सुन्दर्यम्ब त्वदीयामृतगुणकथनं दुर्घटं मन्दधीभि-
र्नूत्नागारावलोकः पर इह नितरां मादृशां श्रेयसेऽलम् ॥

इति श्रीशिवपराक्रमे आलयपञ्चरत्नं संपूर्णम् ॥

5. கலியின் பாபத்தினால் சூழப்பெற்ற இப்பொழுதில் தவத்திற்கு காரணமான கிழங்கு, வேர்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



முதலிய உணவு சரீரத்திற்கு சிரமத்தைக் கொடுக்கிறது. ஆனதால் அதுவும் செய்ய முடியாது. அநேக கோடி காலம் குருகுலத்தில் பணிவிடை செய்து அறிவைப் பெறுவதும் பலமில்லாதவர்களால் செய்ய முடியாது. ஹே ஸௌந்தர்ய நாயகி தேவி! உன்னுடைய அமிருதம் போன்ற குணங்களைச் சொல்வதும் மூடர்களால் முடியாது. ஆனதால் என்னைப் போன்றவர்களுக்கு உன்னுடைய ஆலயத்தின் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதே இகத்திலும், பரத்திலும் நன்மையைக் கொடுக்கப் போதுமானது.

ஆலய பஞ்ச ரத்தினம் முற்றிற்று.

---

## ॥ अभिषेकपञ्चरत्नम् ॥

### அபிஷேக பஞ்சரத்னம்.

सौवर्णै रत्नकलशैरनुपमजननि स्थापितैर्धान्यराशौ
कूर्चेणालंकृतैस्ते जलभरितघटैः स्नापनं मन्त्रपूतैः ।
शीघ्रं प्रीत्यै भवेत्ते यदि मम सकलं वाञ्छितं प्रार्थयिष्ये
मत्वैवं मोदमानोऽखिलजनपदतो लोक आयाति सर्वः ॥

1. ஹே ஒப்பிலாவம்பிகே! குவியலாகப் போடப்பட்ட தானியங்களின் மீது வைத்து மந்திரங்களாற் பூஜை செய்யப்பட்டதும், தர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்டதும், தங்கத்தினலும், இரத்தினங்களாலும் செய்யப்பட்டதும், ஜலம் நிறைந்ததுமான குடங்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



களால் உனக்கு அபிஷேகம் நடக்கும்பொழுது பிரீதி அதிகமாயுண்டாகும். அப்பொழுது நாம் விரும்பிய எல்லா வரங்களையும் பிரார்த்தித்துப் பெற்றுக் கொள் வோம் என்று மனதில் நினைத்துக் கொண்டு சந்தோஷ மாக எல்லாத் தேசங்களிலிருந்தும் ஜனங்கள் வருகின்றார்கள்.

आयान्ति प्रेमपूर्णा अनुपमजननि त्वद्दिदृक्षाकुलास्ते
 लोका धृत्वा वरेण्यं वसनमथ कटौ भूषणालंकृताङ्गाः ।
आरुह्योत्तुङ्गयानं शकटमपि पदा पर्यटन्तोऽथ वीथ्यां
 देव्या भक्तस्य किं वा सुकृतफलमिति प्रब्रुवन्तो मिथश्च ॥

2. ஹே ஒப்பிலாவம்பிகே! அன்பு நிறைந்த உன் னுடைய பக்த ஜனங்கள் உன்னைப் பார்க்கவேணு மென்கிற ஆவலால் உயர்ந்த வஸ்திரத்தை இடுப்பில் உடுத்திக் கொண்டும் ஆபரணங்களால் தங்கள் சரீ ரத்தை அலங்கரித்துக் கொண்டும் உயரமான வாக னங்களிலும், வண்டிகளிலும் ஏறிக் கொண்டும், நடந் தும் வீதியில் வலம் வந்து கொண்டும், தேவியின் பக்த னுக்கு இந்தப் புண்ணியத்துக்குத் தகுந்த எவ்வித பலன் கிடைக்கப் போகிறதோவென்று ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டும் வருகிறார்கள்.

स्वीकृत्याज्ञां त्वदीयामनुपमजननि ग्रीष्मतापं महान्तं
 पर्जन्यो वृष्टिभिः संशमयति नितरां त्वज्जनानां शरीरात् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



स्वेदाम्भो जातमुर्वी परित उपगतं शोषयत्यद्य वायुः
क्षिप्रं दीपेषु तिष्ठन्नहमहमिकया ध्वान्तमग्निर्विहन्ति ॥

3. ஹே ஒப்பிலாவம்பிகே! உன்னுடைய உத்தரவை சிரமேற் கொண்டு வெய்யிலால் உண்டான அதிகமான வெப்பத்தை மேகங்கள் மழைகளால் அடக்குகின்றன. பக்தர்களுடைய சரீரத்திலிருந்து மிகவும் பெருகி பூமியின் நான்கு பக்கத்திலும் பரவின வியர்வை ஜலத்தை வாயு பகவான் சீக்கிரம் வற்றச் செய்கிறார். அக்கினி பகவான் தீபங்களில் இருந்து கொண்டு நான் முந்தியென்று சீக்கிரமாய் இருளை விலக்குகிறார்.

त्वद्गेहे कुम्भसेको भुवि निखिलजनैः प्रेमतश्चाहतोऽभूत्
प्रीतैर्देवैस्तथैव व्यरचि दिवि महो देवि सौन्दर्यनाथे ।
भक्तो भक्तिं समग्रां त्वयि विरचयति व्याजलेशेन हीनां
भक्तानां त्वं करोषि द्रुतमखिलमनोवाञ्छितार्थं करस्थम् ॥

4. ஹே சௌந்தர நாயகியம்பிகே! உன்னுடைய ஆலயத்தில் நடக்கும் கும்பாபிஷேகமானது எவ்விதம் பூமியில் எல்லா ஜனங்களாலும் அன்போடு ஆதரிக்கப் பட்டதோ அவ்விதமே ஸ்வர்க்கத்திலும் தேவர்களால் சந்தோஷத்தோடு கும்பாபிஷேக உத்ஸவமானது ஆதரிக்கப் பெற்றது. பக்தர்கள் கொஞ்சங்கூட கபட மன்னியில் உன்னிடத்தில் எப்படி பூர்ணமான பக்தியைச் செய்கிறார்களோ, அப்படியே நீயும் பக்தர்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



கள் மனதில் விரும்பின எல்லாப் பொருள்களையும் கையிற்கிடைக்கும்படி செய்கிறாய்.

उच्चं प्राप्ते दिनेशे सुरगुरुदिवसे हस्तनक्षत्रयुक्ते
युग्मे लग्ने त्रयोदश्यधिगमितशुभे नूतनं गेहमेत्य ।
स्तम्भैरत्युन्नताग्रैर्विविधमणिकृतैः संयुतं भक्तवर्यैः
प्रीत्या निर्मापितं तत्ससुतपतिगणां भावये सुन्दराम्बाम् ॥

इति शिवपराक्रमे अभिषेकपञ्चरत्नं संपूर्णम् ॥

5. சூரியன் உச்சமான மேஷ ராசியை அடைந்திருக்கும் சித்திரை மாதத்தில் த்ரயோதசி ஹஸ்த நக்ஷத்திரம் குருவாரம் கூடிய சுபதினத்தில் மிதுன லக்னத்தில் மிகவும் உயர்ந்த நுனிகளையுடையதாயும், அநேக ரத்தினங்களால் உண்டுபண்ணப்பட்டதுமான தூண்களோடு கூடியதும், அன்போடு பக்தர்களால் திருப்பணி செய்யப்பட்ட புதிய ஆலயத்தில் கணவரோடும் புத்திரர்களோடும் பிரமத கணங்களோடும் விளங்கிக் கொண்டிருக்கும் ஸௌந்தர்யநாயகி அம்பாளைத் தியானிக்கின்றேன்.

அபிஷேக பஞ்சரத்னம் முற்றிற்று.

## सौन्दर्यदेवीसप्तरत्नम् ॥

### ஸௌந்தர்யதேவீ ஸப்தரத்னம்.

वन्दे सौन्दर्यदेवीं प्रणतजनततेः प्रार्थितार्थाननुपान्तं
प्राप्यास्तोकान् प्रदातुं सपदि करुणया बद्धकच्छां प्रसन्नाम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



श्रुत्वा कीर्तिं यदीयां त्रिभुवनविततां पादपः कल्पकाख्यः
खिन्नोऽन्तः पत्रजातापगममिव तरुर्भूमिजोऽङ्गीकरोति ॥ १ ॥

1. தன்னை வணங்கிய ஜனங்களுக்கு விரும்பிய பொருளைக் கொடுப்பதற்குத் தானே அவர்களின் ஸமீபத்திற்குப்போய்க் கொடுப்பதாய்க் கங்கணம் கட்டிக்கொண்டு கருணையால் கொடுக்கிறவளாயும், முகத்தில் சந்தோஷமுடையவளாயுமிருக்கும் சௌந்தரநாயகி அம்பாளை நமஸ்கரிக்கின்றேன். மூன்று உலகத்திலும் பரவின அம்பாளின் கீர்த்தியைக் கேள்வியுற்று மனதில் வருத்தமடைந்த கற்பக விருக்ஷம் பூமியிலிருக்கும் மரம்போல் தன் இலைகளை உதிர்த்தது.

वन्दे सौन्दर्यदेवीं सतनुमिव कृपां पालने पादभाजां
बद्धश्रद्धां समीड्यां कृतसुचरितैः सेवया प्रीयमाणाम् ।
यां द्रष्टुं सर्वदेवैः सविधमुपगतैर्भूमिरुर्वी ऽस्थिरा च
द्यौस्तूलो वात्ययेव प्रसभमभिहता व्रीडयेवास्ति लघ्वी ॥ २ ॥

2. பிரத்தியக்ஷமாய்ச் சரீரத்துடன் வந்த கிருபைபோலும், பாத சேவை செய்கிறவர்களை அன்புடன் காக்கிறவளாயும், புண்ணியவான்களால் தோத்திரம் செய்யத் தகுந்த பெருமை பெற்றவளாயும், தொண்டியற்றியவர்களிடத்தில் அன்பு நிறைந்தவளாயுமிருக்கும் சௌந்தரநாயகி அம்பாளை நமஸ்கரிக்கின்றேன். ஒரே காலத்தில் எல்லாத் தேவர்களும் அம்பாளைத் தரிசனம் செய்ய வந்ததால் பூமி கனமாகவும், அசை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



யாமலுமிருக்கிறது. சுவர்க்க லோகம், சுழல் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் வெகுதூரம் போயும், வெட்கத்தினால் உடலை சுருக்கிக் கொண்டதுபோலும், மறைவாய் இருக்கிறது.

मातः सौन्दर्यनाथे विरचयति रतिं त्वत्पदाब्जेऽखिलेड्ये
यस्तं लक्ष्मीरुपैति स्वयमधिकमुदा वाञ्छनीयापि सर्वैः ।
तस्मात्त्वावासगेहादिव सरसिजान्नैकदा विप्रयुङ्क्ते
तस्मै न क्रुध्यतीव त्रिभुवनपतये प्रेयसे शार्ङ्गिणे सा ॥ ३ ॥

3. ஹே சௌந்தரநாயகி அம்பா! எல்லோரும் தோத்திரம் செய்யத் தகுதியான உன் திருவடியில் அன்பு செய்கிறவனை எல்லோரும் விரும்பக் கூடிய லெக்ஷிமீ தேவி தான் விருப்பத்துடன் அடைகிறாள். தனக்கு இருப்பிடமான தாமரைப் புஷ்பத்திலிருந்து எப்பொழுதும் விலகாமலிருப்பதுபோல் அவனை விட்டும் விலகுகிறதில்லை. மூன்று உலகங்களை ஆளும் புருஷனான விஷ்ணுவினிடத்தில் ஸந்தோஷத்துடன் இருப்பதுபோல் அவனிடத்திலும் அவ்விதமே இருக்கிறாள்.

त्वत्पादं सुन्दराम्बाऽऽकलयति हृदये योऽतिमोहावृते च-
द्भाग्येनाथ त्रिभिर्वा गणयितुमपटुं पंच तं सुध्युपास्या ।
वाचां देवी वचांसि स्रवदमृतरसास्वादनिष्पाद्यमान-
क्षोणीनाथीयरत्नाभरणबुधवराह्लादितानि प्रदत्ते ॥ ४ ॥

4. ஹே சௌந்தர்ய நாயகி அம்பா! அதிகமாய்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



அக்ஞானமிருக்கும் தன் மனதில் உன் திருவடியைத் தியானம் செய்தவன் அஞ்சும் மூன்றும் எண்ணத் தெரியா மூடனுயிருந்தாலும் அவனுக்கு வாகீசுவரி யானவள் அமிருதம் ஒழுகும்படி இனிமையான சொல் லும், அதைக்கேட்டு சந்தோஷத்தால் இராஜ ஸம்மானங்களும் வித்வான்கள் மகிழக்கூடிய கல்வியும் உண்டு பண்ணுகிருள்.

देवानां लोकवांछाफलवितरणे प्रेरितानां विधाया-
भ्यर्चां निर्विघ्नमाप्तुं युगपदभिमतं क्लिश्यतीत्यज्ञलोकः ।
सर्वामर्त्याभिवन्द्यं स्वचरणयुगळं सेवयन्ती प्रमोदा-
न्मातः सौन्दर्यनाथे नयसि तमखिलं वांछितार्थं सुखेन ॥

5. ஈசுவரனுல் ஜனங்கள் விரும்பிய பொருள்களை கொடுப்பதற்கு அதிபதியாய் அவ்வளவு தேவர்களும் நியமிக்கப்பெற்றபடி அவர்களை இடையூறின்றிப் பூஜித்து அந்தந்தப் பொருளை அடைவதற்கு மூட ஜனங்கள் கஷ்டப்படுவதைக் கண்டு ஹே ஸௌந்தர்ய நாயகி! அந்தந்தத் தேவர்களால் வணங்கப்படும் உன் திருவடியை சந்தோஷத்துடன் வணங்குகிறவனுக்கு நீ விரும்பிய பொருளெல்லாம் சுகமாய் கிடைக்கும் படி செய்கிருய்.

साधर्म्यं सोदराणां प्रथितमनुपमे मातरासीदिदानीं
लक्ष्मीनाथस्य यत्त्वं भगवति सहजा लोकसंरक्षकस्य ।
सर्वत्रावस्थितिः साऽखिलजगति समा वेङ्कटे चाचले सा
प्रीतिः प्रेयस्यनन्ता विलसति युवयोर्दण्डनं दुर्जनानाम् ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



6. ஹே ஒப்பிலாவம்பிகே! உலகத்தில் சகோதரர்களுக்கு ஒருவருக்கொருவர் குணங்கள் ஒன்ருயிருக்குமென்பது இப்பொழுது வெளியானது. விஷ்ணுவுக்கு நீ ஸகோதரியானதால் நீங்கள் இருவர்களும் உலகத்தைக் காப்பாற்றுகிறீர்கள். எல்லா உலகத்திலும், எல்லாப் பொருள்களிலும், நிறைந்து இருக்கிறீர்கள். விஷ்ணுவுக்கு திருப்பதி மலையில், அதிகப் பிரீதி. அதைப்போல் உனக்கு வெங்கிடாசலமென்கிற பக்தனிடத்திலும் அதிகப் பிரீதி. துஷ்ட நிக்ரகமும் இருவர்களிடத்திலுமிருக்கிறது.

सुब्रह्मण्यात्मजातोऽनुपमजननि ते सुन्दरस्त्वत्पदैक-
प्रीत्या स्तोत्रं यथाधीमहिम समवदज्जानकीगर्भजातः ।
त्वद्रूपस्यालयस्य स्नपनविधिमहावैभवस्यान्वहं तत्
श्रुत्वोक्त्वाऽऽप्रोच्य वा स्वाभिलषितमखिलं प्राप्नुयात्सर्वलोकः ॥

इति श्रीशिवपराक्रमे सौन्दर्यदेवीसप्तरत्नं संपूर्णम् ॥

7. ஹே ஒப்பிலாவம்பிகே! சுப்பிரமணியரென்பவருடைய புத்திரனுக, ஜாநகீ என்பவளுடைய கெர்ப்பத்திலுதித்த உன் பக்தனை சுந்தரமென்பவன் உன் திருவடியில் வைத்த அன்பினுல் உனது ரூபத்தையும், உனது ஆலயத்தையும், உன் கும்பாபிஷேகச் சிறப்பையும், தன் புத்திக்கு எட்டிய வரையிற் சொன்னுன். இதைக் கேட்பவர்களும், சொன்னவர்களும், இதைப் புகழ்ந்தவர்களும், உனது கிருபையால் அவர்கள் விரும்பின பொருள் எல்லாவற்றையும் அடைய வேண்டும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



## ॥ श्रीकैलासनाथस्तुतिः ॥

## ஸ்ரீ கைலாஸநாதர் ஸ்தோத்திரம்.

ओं लिङ्गमूर्तये नमः ॥

अव्यक्तो व्याप्य तिष्ठन्भुवनमविकलं वाङ्मनोवर्त्मदूरः
संसाराब्धौ निमग्नान्निखिलजडजनानुद्दिधीर्षुः कृपालुः ।
ध्यानार्चां यो जिघृक्षुर्धृतसकलसुराकारालिङ्गस्वरूपो
भूमौ व्यक्तो विभाति प्रदिशतु स शुभं मेऽद्य कैलासनाथः ॥

லிங்கமூர்த்தி

1. கண் காது முதலிய பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படாது ஸூக்ஷ்மரூபியாய் உலகமெங்கும் வியாபித்துக்கொண்டிருப்பவனும், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவனுமான பகவான் ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கும் மூடஜனங்களைக் கரையேற்ற விரும்பி ஜனங்கள் தன்னை தியானம் செய்யவும், பூஜை செய்யவும் தகுதியான எல்லாத் தேவர்களுடைய ரூபத்தையும் தன்னிடத்தில் அடக்கிய லிங்கவடிவாய் ஐம்புலன்களுக்கும் புலனாகும்படி பூமியில் தோன்றியிருக்கும் கைலாஸநாதஸ்வாமி எனக்கு எப்பொழுதும் சுபத்தைக் கொடுக்கட்டும்.

ओं लिङ्गोद्भवमूर्तये नमः ॥

गर्वाविष्टौ महीयानहमिति बहुधा स्पर्धया ब्रह्मविष्णू
भूत्वा हंसो वराहश्चरणमपि शिरो द्रष्टुकामौ स्वकीयम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



क्लिष्टावन्विष्य भूमेरध उपरि चिरं जातभक्ती स्तुवन्ता-
वाविर्भूयाथ लिङ्गादकुरुत मुदितावेष कैलासनाथः ॥ २ ॥

லிங்கோத்பவ மூர்த்தி.

2. அனேக விதத்தால் தான் தான் பெரியவன் என்று கர்வம் கொண்ட பிரும்மாவும் விஷ்ணுவும் அன்னமாகவும் பன்றியாகவும் உருக்கொண்டு தன் சிரஸையும் பாதத்தையும் காண விரும்பி, ஒருவருக்கொருவர் ஜயிக்க விருப்பத்தினுல் பூமிக்கு மேலும் கீழும் வெகுகாலம் தேடிக் கஷ்டப்பட்டும் பயனடையாமல் அன்புடன் தன்னைத் தோத்திரம் செய்ய, லிங்க வடிவத்திலிருந்து அவர்களை சந்தோஷப்படுத்த மனுஷ்ய வடிவமாகக் கைலாஸநாதஸ்வாமி எழுந்தருளினுர்.

ओं मुखलिङ्गमूर्तये नमः ॥

देवेषु क्षेमदेषु श्रुतिभिरभिहितं स्वस्य मुख्यत्वमार्य-
स्सर्वेषामिष्टसिद्धेर्बहुतरकृपया हेतुतां व्यञ्जयन्यः ।
लिङ्गाकारोऽपि मञ्जुस्मितसहितमुखो भ्राजमानोऽनिशं मे
साम्बः कैलासनाथो मधुप इव मुदा वर्ततां हृत्सरोजे ॥

முகலிங்கமூர்த்தி.

3. உலகத்திற்கு க்ஷேமத்தைக் கொடுக்கும் தெய்வங்களுக்குள் தான் சிறந்தவனுக வேதம் கூறின விஷயத்தையும் எல்லோரும் அவரவர் விரும்பின பொருளை எல்லாம் அடைவதற்கு மிகுந்த கருணையுற்ற தானே

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



காரணம் என்பதையும் வெளியிட விரும்பி லிங்காகாரவடித்திலேயே புன்சிரிப்பு பொருந்திய திருமுகத்துடன் விளங்கி முக்யமென்றும் காரணமென்றும் பொருளடங்கிய முகலிங்கமூர்த்தியாயெழுந்தருளின அம்பாளுடன் கூடிய கைலாஸநாத சுவாமி தாமரைப் புஷ்பத்தில் வண்டுபோல என் மனதில் எப்பொழுதும் அன்புடன் இருக்கட்டும்.

ओं सदाशिवमूर्तये नमः ॥

कारुण्याक्तैः कटाक्षैर्गिरिरिव पविना भिन्धि मोहोच्चयं स्वं
ज्ञानं मोक्षं च देहि द्रुतमिति सकलान्याचमानान् मुनीन्द्रान् ।
सद्योजातादिवक्त्रैः श्रुतिमिव निपुणः कामिकाद्यागमान् यः
प्रीत्यैव ज्ञापयन्मे स शिव उपनतो देवकैलासनाथः ॥

ஸதாசிவ மூர்த்தி.

4. கருணைமிக்க கடாக்ஷவீக்ஷணத்தினால், வச்சிராயுதத்தினால் பர்வதத்தைப் பிளப்பதுபோல் எங்கள் அக்ஞானத்தை விலக்கி மெய்ஞானத்தையும் மோக்ஷத்தையும் சீக்கிரம் கொடுக்கவேண்டுமென்று யாசிக்கிற எல்லா மஹரிஷிகளுக்கும், ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் ஐம்முகங்களால், முன் வேதத்தை அறிவித்தது போல் காமிகம் முதலிய ஆகமங்களையும் அன்புடன் அறிவித்த சதாசிவமென்ற கைலாஸநாதஸ்வாமி என் ஸமீபத்திலிருக்கட்டும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



ओं महासदाशिवमूर्तये नमः ॥

ओतं प्रोतं च सूत्रे मणय इव महत् स्थावरं जङ्गमं तत्
यस्मिन्नन्तर्बहिर्यः सममिदमखिलं तिष्ठति व्याप्य विश्वम् ।
विंशत्या पञ्चभिर्यो विलसति वदनैस्तं महान्तं षडङ्गै-
र्वेदैर्वेद्यं जनानां शिवमभिमतदं स्तौमि कैलासनाथम् ॥

மஹா ஸதாசிவமூர்த்தி.

5. நூலில் இரத்தினங்கள் கோர்த்திருப்பது போல் அசையும் பொருளும் அசையாப் பொருளுமான உலகம் எவனிடத்தில் ஓதப்ரோதங்களாயிருக்கிறதோ எவன் உலகத்தில் உள்ளும் புறமும் ஒரேவிதமாய் வியாபித்துக் கொண்டிருக்கிறானோ, இருபத்தைந்து முகங்களோடு எழுந்தருளியிருப்பவனும், வேதம், வேதத்தின் அங்கங்கள் இவைகளால் சிறப்பித்துக் கூறப்பெறுகிறவனும் ஜனங்களுக்கு இஷ்டத்தைக் கொடுப்பவனுமான கைலாஸநாத ஸ்வாமியைத் தோத்தரிக்கின்றேன்.

ओं उमामहेशमूर्तये नमः ॥

अग्नावौष्ण्यं निदाघो दिनकर इव सा येन तादात्म्यमेत्य
प्रीताज्ञप्ता विभिन्ना सपदि तदुचितं प्राप्य नानास्वरूपम् ।
कुर्वाणा पंचकृत्यान्यनुदिवसमुमा भ्राजतेऽद्यापि लोके
सोऽयं कैलासनाथो दिशतु मम मुदं दुर्लभां देवतानाम् ॥

உமாமஹேசமூர்த்தி.

6. அக்கினியிடத்தில் உஷ்ணம் போலும், சூரிய



CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



ணிடத்தில் வெய்யிற்போலும், பிரிக்கமுடியாமல் தாதாத்மிய ஸம்பந்தம்பெற்று ஸந்தோஷமடைந்த உமாதேவியை தன்னைவிட்டுப் பிரித்து உலகத்துக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபவம் அனுக்ரஹ மென்னும் ஐந்து கிருத்தியங்களையும் நடத்திக் கொண்டிருக்கும்படி கட்டளையிட்டு எப்பொழுதும் அநேக ரூபங்களுடன் அவ்விதமே நடத்திவரச் செய் தருளும் கைலாஸநாத சுவாமி தேவர்களுக்கும் கிடைக் காத மிகுந்த சந்தோஷத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

ओं सुखासनमूर्तये नमः ॥

सौन्दर्यस्याधिदेव्या जनिमृतिसततक्लिष्टलोकान् कटाक्षैः
पुष्णन्त्या लोकमात्रा सदयहृदयया षड्भुजः पृष्ट आह ।
आसीनो विष्टरे यः सुखकृति दयितां स्थापयन्वामपार्श्वे
भक्तेः स्वस्य प्रभावं श्रुतिनुत इह मामेतु कैलासनाथः ॥

ஸுகாஸனமூர்த்தி.

7. ஜனன மரணங்களால் வருந்துகிற ஜனங்களை மனதன்போடு கடாக்ஷித்து க்ஷேமமடையச் செய்த உலக மாதாவான ஸௌந்தரநாயகி தேவியால் ஜனங்கள் உஜ்ஜீவிக்கும் காரணத்தை வினவப் பெற்று ஆறு திருக்கரங்களுடன் ஸுகாசனத்தில் உட்கார்ந்து கொண்டு தேவியையும் தன் இடது பக்கத்தில் உட்காரச்செய்து தன்னிடத்தில் பக்தி செய்தலின் பெருமையை உபதேசித்தவரும் வேதங் களால் துதிக்கப்பெற்றவருமான கைலாசநாதசுவாமி யென்னை அனுக்கிரகிக்க வரட்டும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal



ॐ उमेशमूर्तये नमः ॥

सृष्टिर्विश्वस्य नित्यं विलयविरहिता विश्वनाथ त्वयेयं
वैधात्री वर्धनीया सकरुण भगवन्नुक्त इत्यच्युतेन ।
वामांसात्स्वस्य शक्तिं सपदि विरचयन् तद्युतो यस्तथैव
प्रीतोऽकार्षीदुमेशः शरणय तमये भाव कैलासनाथम् ॥

உமேசமூர்த்தி.

8. ஹே விசுவநாத! பிர்மா செய்யும் உலக சிருஷ்டி நாசமடையாமல் எப்பொழுதும் விருத்தியடையவேண்டுமென்று விஷ்ணுவால் பிரார்த்திக்கப்பெற்றவரும் தன் இடது பக்கத்திலிருந்து தன் சக்தியை உண்டுபண்ணி அவளுடன் கூடியிருந்து கொண்டு அவ்விதமே உலக சிருஷ்டியை வளரச்செய்த உமேசுரன கைலாஸநாத சுவாமியை ஹே மனமே சரணமடைவாய்.

ॐ सोमास्कन्दमूर्तये नमः ॥

शूरेणान्वर्थनाम्ना सततमपकृतान्त्राक्षितुं दानवारीन्
षड्वक्त्रात् षट् स्फुलिङ्गान् सनिटिलनयनाद्यैः सृजन् द्योतमानान् ।
सद्यः प्रापय्य गङ्गां शरवणसविधे वर्धितान् कृत्तिकाभि-
र्देव्याऽऽनाय्यान्तिकं स्वं सतनुजवनितः पातु कैलासनाथः ॥

ஸோமாஸ்கந்த மூர்த்தி.

9. சூரனென்று உண்மையான பெயர்பெற்ற அசுரனால் கஷ்டமடைந்த தேவர்களைக் காக்கவிரும்பி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



தன் ஆறு முகத்திலிருக்கும் ஆறு நெற்றிக்கண்களிலிருந்து பிரகாசிக்கிற ஆறு நெருப்புப் பொறிகளை உடனே உண்டுபண்ணி அவைகளை கங்கையின் அருகில் கொண்டுபோய் சேர்த்து கிருத்திகா நக்ஷத்திர தேவதைகளான ஆறு தேவிகளால் வளர்க்கச்செய்து உமாதேவியாரால் தன் சமீபத்திற்கொண்டுவரச் செய்து உமாதேவியுடனும் சுப்பிரமண்யருடனும் தான் கூடியிருந்ததால் ஸோமாஸ்கந்தரென்று பெயர் பெற்ற கைலாஸநாத சுவாமி காப்பாராக.

ओं चन्द्रशेखरमूर्तये नमः ॥

लोकानन्दः सुधांशुर्निखिलनिजकलासंक्षयं दक्षशापा-
त्प्राप्तः शोचन् स्वमन्तर्निरवधितपसाऽऽराधयन् सर्वदेशम् ।
मौलौ धृत्वा प्रमोदान्नवकुसुमवद्येन कारुण्यधाम्ना
नित्यं वर्धिष्णुरूपो व्यरचि दुरिततः पाहि कैलासनाथ ॥

சந்திரசேகரமூர்த்தி.

*10.* ஜனங்களை ஆனந்திக்கச் செய்பவனும் தக்ஷ பிரஜாபதியின் சாபத்தால் தன் எல்லாக் கலைகளும் நாள்தோறும் குறைய வருத்தத்துடன் தன்னை மனதில் தியானித்துக்கொண்டு யெல்லையில்லாத தவத்தைச் செய்த சந்திரனை சந்தோஷத்தால் புதிய புஷ்பத்தைத் தரிப்பதுபோல் சிரசில் அணிந்துகொண்டு தினந்தோறும் வளரும்படியும் செய்த ஹே கைலாஸநாத சுவாமியே! பாபத்தை நீக்கி என்னையும் காக்க வேணும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



ओं वृषारूढमूर्तये नमः ॥

प्राप्याकारं वृषस्य प्रमथपत उमासंयुतं त्वां वहामि
प्रेम्णेति प्रार्थयन्तं हरिमतिकरुणो वीर्यवन्तं विधाय ।
आरुह्यानन्दसान्द्रो नतजनमखिलं यः स्वयं दातुमिष्टं
वत्सं स्वं गौरिवेति प्रतिदिनमवतान्मां स कैलासनाथः ॥

விருஷாருட மூர்த்தி.

11. ஹே பிரமதகணத்தலைவனே யான் இடபத்தின் உருவத்தை அடைந்து அன்பினுல் உமாதேவியுடன் உம்மையும் வஹிக்கிறேனென்று வேண்டுகிற விஷ்ணுவை அதிகக் கருணையுடன் தன்னை வஹிக்கப் போதுமான பலத்தைக் கொடுத்து சந்தோஷத்துடன் அவர்மீது ஆரோஹணித்து பசு தன் கன்றைத் தேடிப் போவதுபோல் வேண்டினதைக் கொடுக்க தினந் தோறும் பக்தர்களின் அருகில் செல்லுகிற கைலாஸ நாதசுவாமி தினந்தோறும் என்னைக் காக்கட்டும்.

ओं वृषान्तिकमूर्तये नमः ॥

कल्पस्यान्तेऽपि नैव प्रळयमधिगता प्राप्तवीर्या बुभूषु-
र्धर्माधिष्ठातृदेवी वृषभतनुधराऽतिष्ठमाना तपांसि ।
पूर्णत्रिव्येकपादा प्रतियुगभवनावास्त्व न त्वां त्यजेयं
येनान्वग्राहि सेत्थं स मम पुर इहायातु कैलासनाथः ॥

விருஷாந்திக மூர்த்தி.

12. பிரளய காலத்திலும் நாசமில்லாமலும் பலத் துடனுமிருக்க விரும்பிய தர்மதேவதை விருஷபத்தின்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



உருவத்தை தரித்துக்கொண்டு தவம் செய்யவும் ஒவ்வொரு யுகந்தோறும் பூமியில் கிருதயுகத்தில் நான்கு கால்களுடனும், திரேதாயுகத்தில் மூன்று கால்களுடனும், த்வாபரயுகத்தில் இரண்டு கால்களுடனும், கலியுகத்தில் ஒரு காலுடனும் இருப்பாய். உன்னை எப்பொழுதும் விடாமலே அங்கீகரித்துக் கொண்டேன் என்று தர்மதேவதைக்கு அனுக்ரஹம் செய்த கைலாஸநாத ஸ்வாமி இந்த உலகத்தில் இந்த சமயம் அநுக்ரஹம் செய்ய என்முன் தோன்றி வரட்டும்.

ओं भुजङ्गललितमूर्तये नमः ।।

आहृत्यामर्त्यलोकादमृतमविनतां मातरं मोचयित्वा
कारागाराच्च तेन प्रसभमभिहताः काद्रवेया भयार्ताः ।
कारुण्यस्याकरेण ह्यभयमधिगताः येन मूर्तौ धृतास्ते
क्षेमं तार्क्ष्यं त्वपृच्छन् हरतु रिपुभयं मे स कैलासनाथः ।।

புஜங்கலலித மூர்த்தி.

13. தேவலோகத்திலிருந்து அமிருதம் கொண்டு வந்து விநதை என்று பெயர் கொண்டவளும் உண்மையில் வணக்கமில்லாமல் கர்வம் கொண்ட தன் தாயை விலங்கிலிருந்து விடச்செய்து இந்த கோபத்தால் கத்ருவின் புதல்வர்களான ஸர்ப்பங்கள் கருடனால் அடிக்கப்பெற்று பயங்கொண்டு தன்னைச் சரணமடைய அவைகளை கருணாநிதியாயும் அபயமென்று சொல்லித் தன் சரீரத்திலேயே ஆபரணம் போல் அணிந்து கொண்டு கருடா க்ஷேமமா என்றும் கேட்கும்படி அவைகளின்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



சத்துரு பயத்தை நீக்கிவைத்த கைலாஸநாத ஸ்வாமி என் சத்துரு பயத்தையும் நிவர்த்திக்கட்டும்.

ओं भुजङ्गत्रासमूर्तये नमः ॥

पातिव्रत्यस्य भङ्गान्निरवधितपसः स्वस्य वामभ्रुवां च
क्रुद्धैस्तैर्दारुवारण्यावसथमुनिवरैः संजिहीर्षैरितांस्तान् ।
सर्पान् धृत्वा स्वगात्रे मणिगणखचितं भूषणं मन्यमानो
ज्ञानेनान्वग्रहीद्यो हरतु भवभयं मे स कैलासनाथः ॥

புஜங்கத்ராஸ மூர்த்தி.

14. எல்லையில்லாத தங்கள் தவமும் தங்கள் ஸ்திரீகளின் பதிவ்ரதா தர்மமும் அழிந்ததால் தாருகாவன ரிஷிகள் கோபங்கொண்டு தன்னை ஸம்ஹரிக்க விரும்பி அபிசார யாகத்தினுல் தன்னிடத்தில் அனுப்பிய ஸர்ப்பங்களை ரத்னமிழைத்த ஆபரணத்தைப் போல் ஸந்தோஷமாய்த் தன் சரீரத்தில் அணிந்துகொண்டு பிறகு அதே முனிவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து அனுக்ரஹம் செய்த கைலாஸநாத ஸ்வாமி என் ஸம்ஸார பயத்தை விலக்கட்டும்.

ओं सन्ध्यानृत्तमूर्तये नमः ॥

प्राश्नन् हालाहलाख्यं विषममृतनिभं मोदमानोऽतिघोरं
नैषद्विन्दन्विकारं कमपि रचयितुं काङ्क्षमाणो विनोदम् ।
मौनी किंचिच्छयानस्तदनु हरिमुखे दैवते क्लृप्तवाद्ये
सायं यो नृत्यतीशो भवतु मम पुरः सोऽद्य कैलासनाथः ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



ஸந்த்யாந்ருத்த மூர்த்தி.

15. மிகவும் கோரமான ஆலகாலமெனச் சொல்லும் விஷத்தை அமிருதம்போல் உட்கொண்டு கொஞ்சமும் விகாரமில்லாமல் ஸந்தோஷமடைந்தவரும் ஒரு வேடிக்கை செய்ய விரும்பி மௌனமாய் கொஞ்ச நேரம் படுத்துக்கொண்டிருந்து பிறகு விஷ்ணு முதலிய தேவர்கள் மத்தளம் முதலிய வாத்தியம் வாசிக்கும்படி சாயங்காலத்தில் நர்த்தனம்செய்யும் கைலாசநாத சுவாமி இப்பொழுது என் முன்னிலையிலிருக்கட்டும்.

ओं सदानृत्तमूर्तये नमः ॥

देवः पञ्चाक्षरेड्यो निखिलजडजनान्मायया संनिबद्धान्
तस्याः संमोचयिष्यंश्च नयनहृदये स्थापयिष्यन्स्वपादे ।
कुर्वाणः पञ्चकृत्यान्यनुदिनमुमया वीक्षितो यस्त्रिहस्तो
द्व्यंघ्रिर्नृत्तं चकाराश्रितजनसुरभे सोऽत्र कैलासनाथ ॥

ஸதா நருத்த மூர்த்தி.

16. ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரங்களால் தோத்திரம் செய்யப் பெறுகிறவனும் மாயையால் கட்டப்பட்டிருக்கும் எல்லா ஜனங்களையும் அம்மாயையிலிருந்து விடுவிக்கவும் மனதையும், கண்களையும், தன் திருவடியிலேயே நிலையாயிருக்கும்படி செய்யவும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம், என்னும் ஐந்து கிருத்தியங்களை நடத்திக்கொண்டே தினந்தோறும் உமாதேவியார் பார்க்கும்படி மூன்று திருக்கரங்களோடும் இரண்டு திருவடிகளோடும் நர்த்தனம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



செய்தவரும் அண்டின ஜனங்களுக்கு காமதேனுவைப் போல நினைத்ததைக் கொடுப்பவருமான ஹே கைலாச நாத சுவாமியே! நீ என்னைக் காப்பாற்றவேணும்.

ओं चण्डताण्डवमूर्तये नमः ॥

आपीय द्वेषिरक्तं सततधृतमदां लोकभीषास्वरूपां
नृत्यन्तीं भद्रकाळीं बहुभुजसहितां जेतुकामो महेशः ।
नृत्यन् सन्नूर्ध्वपादः श्रवणविगळितं कुण्डलं धारयंश्च
तुष्टं कुर्वन्सुनन्दं मुनिमुरगवरं भाति कैलासनाथः ॥

சண்ட தாண்டவ மூர்த்தி.

17. சத்ருக்களின் இரத்தத்தைப் பானம் செய்து எப்பொழுதும் மதமடைந்து லோகத்துக்குப் பயங்கரமான ரூபத்துடன் நர்த்தனம் செய்கிறவளும் அநேக கைகளுடன் கூடியவளுமான பத்ர காளியை தோல்வியடையச் செய்யவும், வெட்கமடையச் செய்யவும், திருவடியை உயரத்தூக்கிக் கொண்டும் காதிலிருந்து நழுவி விழுந்த குண்டலத்தை மறுபடி காதிலெடுத்துப் போட்டுக்கொண்டும் ஸுநந்தனென்கிற முனிவருக்கும் ஆதிசேஷனுக்கும் காக்ஷி கொடுப்பதின் பொருட்டும் நர்த்தனம் செய்து கொண்டு கைலாஸநாத சுவாமி விளங்குகிறார்.

ओं गङ्गाधरमूर्तये नमः ॥

लीलावत्या महेश्या करनळिनदळैर्मीलिते स्वस्य नेत्रे
लोके क्लिश्यत्यशेषे निबिडिततमसा शीघ्रमुन्मीलिते च ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



निर्यान्तीरङ्गुलीभ्यास्त्रिजगति वितता स्वेदजङ्गा दधार
स्वापीडे यः कपर्दे तमवितभुवनं स्तौमि कैलासनाथम् ॥

கங்காதர மூர்த்தி.

18. ஈசுவரியான ஒப்பிலாவம்பிகை லீலாவிநோதத்தால் திருக்கரங்களால் நாதன் கண்களை மறைக்கவும் அதிகமான இருளால் எல்லா உலகங்களும் கஷ்டமடைவதைப் பார்த்து தேவியார் சீக்கிரம் கண்களைத் திறக்கும்படி தன் திருக்கரங்களை வெளியிலெடுக்க விரல்களிலிருந்து பெருகியதும் மூன்று உலகத்திலும் வியாபித்ததுமான வியர்வைகளாகிற கங்கைகளைத் தன் சிரசில் உள்ள சடைமுடியில் தாங்கி உலகத்தைக் காப்பாற்றின கைலாஸநாத சுவாமியை நான் தோத்திரம் செய்கின்றேன்.

ओं गङ्गाविसर्जनमूर्तये नमः ॥

सुप्रीतो यः कपर्दादधिधरणि मनाङ्मोचयामास गङ्गा-
मासङ्गेनोत्तमाङ्गे चिरमपि विधृतां पूर्वजानुद्दिधीर्षोः ।
प्रीत्यै विश्वस्य भागीरथमन इत्र तत्पूरयन् पुष्कराक्षं
सेवे सोमावतंसं तमखिलसुहृदं पूज्यकैलासनाथम् ॥

கங்காவிஸர்ஜன மூர்த்தி.

19. ஆவலால் சிரஸில் வெகுகாலமாய் தரித்திருந்த கங்கையையும் தன் முன்னோர்களுக்கு நல்ல கதியைக் கருதித் தன்னிடத்தில் கங்கையை பிரார்த்திக்கும் மூன்றுலகிலிருக்கும் ஜனங்களின் விருப்பத்தை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



முன் பகீரதன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ததுபோல் பூர்த்திசெய்ய விரும்பித் தன் சடைமுடியிலிருந்து பூமியில் கொஞ்சம் கங்கையை விடுத்து எல்லோருக்கும் நன்மை செய்தவனும் தாமரைப் புஷ்பம்போல் அழகான கண்களையுடையவனும் சந்திரசூடனுமான கைலாஸநாத ஸ்வாமியை சேவிக்கிறேன்.

ओं त्रिपुरान्तकमूर्तये नमः ॥

दैत्यारिर्यस्य वाणो जवमधिकमितः पक्षिपक्षेण युक्तः
विख्यातं शत्रुभेद्यं त्रिपुरमपि नयन्नामनाशं स्मितेन ।
प्राणैर्युक्तानदुष्टानकुरुत दितिजान्तारकाख्यादिमान्यः
स्वस्याज्ञाकारकांश्च द्रुतमुपचर तं भाव कैलासनाथम् ॥

திரிபுராந்தக மூர்த்தி.

20. கருடனிடத்தில் பக்ஷமுள்ளவராயும், அதிக வேகத்துடன் பக்தரக்ஷணத்தின் பொருட்டுச் செல்லுகிறவரும், அசுரர்களுக்குச் சத்ருவான விஷ்ணுவை பக்ஷியின் இறகோடு கூடியும், அதி வேகமாய் சத்ருவினிடத்தில் போகும் அசுரர்களுக்கு சத்ருவான பாணமாய்ச் செய்துகொண்டு அதனால் பலத்தைப்பெற்றும், அசுரர்களுடைய மூன்று பட்டணங்களையும், தன் பொற்சிரிப்பினாலே தானே பெயர்கூட மிஞ்சாமல் நாசம் செய்து தன்னைச் சரணாகதியடைந்து பிரார்த்திக்கும் தாரகன் முதலிய அசுரர்களைக் கருணையால் உயிரோடிருக்கும்படியும் பிறகு தனக்கே வேலைக்காரர்களாகவும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation



வைத்துக்கொண்டு காப்பாற்றின கைலாஸநாத ஸ்வாமியை ஏ மனமே! உபசரிப்பாய்.

ओं कल्याणसुन्दरमूर्तये नमः ॥

आकारेणैव पुण्यैर्जगति सुकृतिभिः प्रोच्यते यो महीयान्
तस्य क्ष्माभृद्वरस्य प्रियदुहितृमणिं शैशवादातपांसि ।
कुर्वन्तीं स्वं समेतुं त्रिभुवनजननीमीक्षमाणोऽन्तरङ्गं
यो मोदेनोदुवाह प्रणम हृदय तं प्रीतकैलासनाथम् ॥

கல்யாணஸுந்தர மூர்த்தி.

21. உலகத்தில் எல்லோரும் ரூபத்தில் பெரிதாகச் சொல்வதுபோல் புண்யவான்கள் புண்யத்திலேயும் உயர்ந்தவனாய் சொல்லத் தகுந்த பர்வதராஜனான ஹிமவானுடைய உத்தம புதல்வியானவளும், பாலியம் முதல் தவம் செய்து வருபவளும், தன்னை அடைய விரும்பியவளுமான உமாதேவியார், மூன்றுலகங்களுக்கும் தாயாயிருப்பினும் மாறுவேடத்துடன் பலவிதமாய் மனதைப் பரிசோதித்துப் பிறகு அன்புடன் மணம் புரிந்துகொண்டு ஸந்தோஷமடைந்த கைலாஸநாத சுவாமியை ஹே நெஞ்சமே! வணங்குவாய்.

ओं अर्धनारीश्वरमूर्तये नमः ॥

त्यक्त्वा मां भृङ्गिनामाऽभजत मुनिरयं देवमित्यात्मनस्तत्
पार्थक्यं त्यक्तुमीशे सुचरितसुलभं प्राप्तुमैक्यं च नित्यम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai



इच्छन्तीं क्लिश्यमानां चिरमिह तपसा प्रेयसीमर्धनारी-
भूयाऽऽस्ते प्रीणयन्यस्तमुदितकरुणं पश्य कैलासनाथम् ॥

அர்த்தநாரீசுவர மூர்த்தி

22. என்னை விட்டுத் தனியாய் ஈசுவரனை இந்த பிருங்கி முனி ஸேவித்தார். ஈசுவரனை விட்டு நாம் தனியாயிருப்பதாலல்லவோ, இந்த முனிவர் என்னை அவமதித்தார். புண்யத்தைச் செய்து ஈசுவரனோடு ஐக்கியத்தையடைய வேண்டுமென்று வெகுகாலமாய்த் தவம் செய்து கிலேசமடைகிற தன் நாயகியான ஒப்பிலாவம்பிகையைத் தன் பாதி சரீரத்தோடு ஒன்றாய்ச் சேர்த்துக் கொண்டு அர்த்தநாரீசுவர வடிவமாயிருந்து கொண்டு கருணையுடன் இப்பொழுதும் சந்தோஷப் படுத்துகிற கைலாசநாத சுவாமியை ஹே மனதே! பார்ப்பாய்.

ओं गजान्तकमूर्तये नमः ॥

स्वस्मादन्यैरवध्यो विधृतविधिवरो भीषयन्हस्तिरूपी
देवान्वाराणसीगान्गयदितितनयो भीमरूपेण येन ।
क्षिप्तोऽधः पादहत्या निशितनखमुखैर्दारितोऽमारि तस्य
चर्मोपात्तोत्तरीयं स्तुहि तमवहितो भाव कैलासनाथम् ॥

கஜாந்தக மூர்த்தி.

23. தன்னைத் தவிர மற்ற எவர்களாலும், கொல்ல முடியாமலிருக்கும்படி பிரம்மாவினிடம் வரம் வாங்கிக்கொண்டு யானை வடிவமாய் தன்னிடத்தில்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



பயந்துகொண்டு காசி க்ஷேத்திரத்தில் பகவானை சரண மடைந்த தேவர்களை, உபத்திரவம் செய்யும் கயன் என்ற அசுரனைப் பெரிய உருவத்துடன் தான், முன் தோன்றிக் காலால் உதைத்துக் கீழே தள்ளித் தன் கூரிய நகங்களால் இரண்டாய்க் கிழித்து அவன் தோலையும் தன் திருமேனியிற் போர்த்திக்கொண்டிருக் கும் கைலாஸநாத சுவாமியை ஹே மனமே! மிகுந்த பயபக்தியுடன் தோத்திரம் செய்வாய்.

ओं ज्वरापन्नमूर्तये नमः ॥

ज्ञात्वा कारागृहस्थं सुरमुनिवचसा बाणगेहेऽनिरुद्धं
सद्यस्तन्मोचनाय प्रबलबलिसुतद्वारपाले महेशे ।
क्षिप्तं कृष्णेन शीतं ज्वरमपि विलयं प्रापयन्यस्त्रिमूर्धा
त्र्यंघ्रिः कैलासनाथो ज्वरहरणपटुर्नाशयत्वद्य कष्टम् ॥

ஜ்வராபக்ந மூர்த்தி.

24. நாரத முனிவரின் வார்த்தையால் தன் புதல்வனை அநிருத்தனை பாணாசுரன் அரண்மனையில் ஜெயிலில் போட்டிருப்பதாக அறிந்து, அவனை வெளி யேற்றுவதின் நிமித்தம் அதிக பலசாலியான பாண சுரனுக்கு வாசற்காப்பானாயிருக்கும் தன்னிடத்தில் போர்புரிய விரும்பி கிருஷ்ணனால் போடப்பட்ட சீத ஜ்வரத்திற்குத் தான் உஷ்ண ஜ்வரத்தைப் பிரயோ கித்து அதினால் நாசமடையச் செய்து மூன்று சிரசு களுடனும், மூன்று திருவடிகளுடனும், ஜ்வராபக்ந

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai



மூர்த்தியாய் யெழுந்தருளியிருக்கும் கைலாஸநாத ஸ்வாமி நமது கஷ்டத்தை நிவர்த்திக்கட்டும்.

ओं शार्दूलहरमूर्तये नमः ॥

शार्दूलं दार्वरण्यस्थितमुनिरचितादाभिचारानलाद्यः
प्रादुर्भूयाखिलेशं प्रळयमिव नयन्नाययौ रौद्रघोषः।
आक्रम्यैनं कराळं व्यसुमपि रचयन्खड्गहस्तस्तदीयं
चर्मोत्कृत्यात्मदेहे दिनमनु विधरन् पातु कैलासनाथः ॥

சார்தூலஹர மூர்த்தி

25. தாருகாவன முனிவர்களால் இயற்றப்பெற்ற ஆபிசார யாகத்தின் அக்னி குண்டத்திலிருந்து வெளிவந்ததாயும், எல்லோருக்கும் ஈசனை தன்னையும் நாசமடைவிக்கும்போல் பயங்கரமான கர்ஜனையுடன் தன்னிடம் ஓடி வந்ததான அந்தப் புலியையும் மேலேறிக்கொண்டு கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டவராய் ஸம்ஹரித்து அதன் தோலை அறுத்துத் தன் திருமேனியில் தினந்தோறும் உடுத்திக் கொண்டிருக்கும் கைலாஸநாத சுவாமி நம்மைக் காக்கட்டும்.

ओं पाशुपतमूर्तये नमः ॥

शोचन्तं पुत्रशोकान्निशि निजनिकटं प्रापितं केशवेन
स्वेन क्षिप्तं हरौ यत्कुसुममपि हरे वीक्ष्य तत्तुष्टचित्तम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



बीभत्सुं योऽन्वगृह्णात्पशुपतिदयितं संददत्स्वास्त्रवर्यं
तस्मिन् कैलासनाथे वन हृदय यदि क्षेममिच्छस्यवाप्तुम् ॥

பாசுபத மூர்த்தி.

26. அபிமன்யுவென்னும் புத்திரனுடைய நாசத்தால் வருந்துகிறவனும் தான் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு கிருஷ்ணன்பேரில் பூஜை செய்த புஷ்பங்களை சிவனிடத்தில் பார்த்து சந்தோஷிக்கிறவனும், இராத்திரியில் கிருஷ்ணனால் கைலாசத்தில் தன் சமீபத்துக்கு அழைத்துக்கொண்டு வரப்பெற்றவனுமான அர்ஜுனனுக்கு பசுபதியை தேவதையாக உடைய தன் பாசுபதமென்னும் திவ்யாஸ்திரத்தைக் கொடுத்து அனுக்ரஹம் செய்த கைலாஸநாத ஸ்வாமியை ஹே மனதே! உனக்கு க்ஷேமமடைய விருப்பமிருந்தால் இடைவிடமல் நினைப்பாய்.

ओं कङ्काळमूर्तये नमः ॥

आक्रम्यांघ्रिद्वयेन क्षितिमपि च दिवं विन्यसन् शिष्टमेकं
शीर्षे मायावटुर्योऽगमयदथ बलिं भिक्षमाणस्तलं हि ।
दृप्तं तं वज्रदण्डाहतमभिरचयन् तस्य पृष्ठास्थिदण्डं
बिभ्रत्कंकाळरूपी लसति य इह तं स्तौमि कैलासनाथम् ॥

கங்காள மூர்த்தி.

27. கபடமாய் பிர்ம்மசாரி வேடம் பூண்டு மூன்றடி மண் கேட்டு இரண்டு அடிகளிற் பூமியையும், அந்தரிக்ஷத்தையும் அளந்து பாக்கியான ஓரடியை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



மஹாபலிச்சக்ரவர்த்தியின் சிரசின் மேல் வைத்து பாதாளத்தில் தள்ளிவிட்டவருமான வாமனுவதாரத்தில் கர்வம்கொண்ட விஷ்ணுவைத் தம்து வஜ்ர தண்டத்தால் அடித்து அவருடைய முதுகெலும்பைப் பிடுங்கிக் கையில் தரித்து கங்காள ரூபத்துடன் விளங்கிக்கொண்டிருக்கும் கைலாஸநாத ஸ்வாமியை நான் தோத்தரிக்கின்றேன்.

ओं शंकरनारायणमूर्तये नमः ॥

आकारस्यैव भेदो न तु भवति भिदा स्वस्य सर्वत्र सत्वात्
यत्रार्चा कुत्र वा स्याद्यदि मम महती प्रीतिरित्याश्रितान्यः ।
कारुण्यात् ज्ञापयन् सन् वहति निजतनौ शंकरस्याच्युतस्य
प्रीत्या रूपं च नाम त्रिजगति तमिमं स्तौमि कैलासनाथम् ॥

சங்கரநாராயண மூர்த்தி.

28. தான் எல்லா மூர்த்திகளிலும் இருப்பதால் சரீரமே வேறு, ஸ்வரூபபேதம் கிடையாது. ஆனதால் எந்த மூர்த்தியை ஆராதித்த போதிலும், யான் பிரீதியடைகிறேனென்று பக்தகோடிகளுக்கு பகவான் அறிவிப்பதின் பொருட்டுத் தன் சரீரத்தில் சிவனுடைய அடையாளமான மான் மழு சூலம் முதலியவற்றையும் விஷ்ணுவின் அடையாளமான சங்க சக்ர பீதாம்பரங்களையும் தரித்துக் கொண்டு அதற்கு அநுகுணமாக சங்கரநாராயணரென்று இருவருடைய பெயரையும் சேர்த்து ஒரே பெயராக வைத்துக்கொண்டு மதபேதம் கூடாதென்று ஜனங்களுக்குப் போதிக்கும் கைலாஸநாத சுவாமியை யான் தோத்திரம் செய்கிறேன்.



CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



ओं भिक्षाटनमूर्तये नमः ॥

साकारः किं मनोभूरयमिति बहुधा वर्णितस्तापसानां
पत्नीभिः प्रार्थ्यमानः स्वमहिम नितरामज्ञमावेदयन् यः ।
दिग्वस्त्रो भिक्षमाणो भुवनपतिरपि प्राप तद्दार्वरण्यं
तस्मिन्कैलासनाथे वसतु मम मनो जङ्गमामर्त्यवृक्षे ॥

பிக்ஷாடன மூர்த்தி.

29. இவர் சரீரத்துடன் வந்த மன்மதனோவென்று பலவிதமாய் முனிபத்னிகள் வர்ணிக்கவும் தன்னை பிரார்த்திக்கவும் தகுதியான ரூபத்துடன் கூடி மூடனுக்கும் தன் பெருமையை வெளியிடவேண்டித் தான் உலகத்துக்குப் படியளிக்கிறவராயினும் நிர்வாணத்துடன் பிக்ஷாடனராய் தாருகா வனத்திற்கு பிக்ஷை வாங்க வந்தவரும் எல்லோருக்கும் நடந்து வருகிற கற்பகவிருக்ஷம் போல் தன்னிடத்தில் வந்து விரும்பினதைக் கொடுக்கும் கைலாஸநாத சுவாமியிடம் என் மனது வஸிக்கட்டும்.

ओं सिंहघ्नमूर्तये नमः ॥

प्रह्लादानुग्रहार्थं नरहरिवपुषा दारयन्तं हिरण्यं
पीत्वा रक्तं तदीयं धृतमदममरान्भीषयन्तं नितान्तम् ।
दंष्ट्राघोरास्यमुग्रं शरभवपुरपि प्राप्य संत्यक्तदौष्ट्यं
दैत्यारिं यश्चकाराऽऽश्रय तमनुदिनं भात्र कैलासनाथम् ॥

ஸிம்ஹக்ந மூர்த்தி

30. பிரஹ்லாதனுக்கு அனுக்ரஹம் செய்வதின்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, J



பொருட்டு நரஸிம்மவடிவம்பெற்று ஹிரண்யகசிபுவை பிளந்து அவனது உதிரத்தைப் பானம் செய்ததால் மதம்பிடித்து அன்பர்களான தேவர்களேயும் துன் புறுத்தி மிகவும் உலகத்துக்குப் பயமடைவிக்கும் விஷ்ணுவைத் தித்திப்பலினுல் பயங்கரமான வாயுடன் கடோரமான சரபத்தின் உருவத்தை எடுத்து அவரது துஷ்டத்தனத்தை யடக்கி வலிமை பெற்ற கைலாஸநாத சுவாமியை ஹே மனமே! தினந் தோறும் துதிப்பாய்.

ओं चण्डेशानुग्रहमूर्तये नमः ॥

नेदीयस्याः स्रवन्त्यास्तटभुवि समुदाचारयन्गाः समस्ता-
स्तत्क्षीरेणाखिलेन स्वरचितसिकतालिङ्गमेवाभिषिञ्चन् ।
छिन्दन्देवापराद्धं पितुरपि चरणं येन दाम्ना विचारः
कण्ठेऽन्वग्राहि चण्डेश्वर इति तमहं स्तौमि कैलासनाथम् ॥

சண்டேசானுக்ரஹ மூர்த்தி

31. தன் கிராமத்திற்கு ஸமீபத்திலிருக்கும் நதி யின் கரையில் அவ்வூரில் உள்ள எல்லா பசுக்களின் பாலேயும் கறந்து மணலேக் குவித்து லிங்க வடிவமாய் வைத்து அதற்கு அபிஷேகம் செய்கிறவனும் காலால் உதைத்து ஈசுவரனுக்குக் குற்றம் செய்த தகப்ப னுடைய காலேயும் வாளால் அரிந்தவனுமான விசார சர்மா என்பவனே உடனே முன்தோன்றி தன் கழுத் தில் அணிந்திருக்கும் புஷ்பமாலேயைக் கழற்றி அவனது கழுத்தில் போட்டு சண்டேசுவர (கோப

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

…ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja…



முள்ளவ) னென்று சொல்லி அனுக்ரகம் செய்து கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கின்றேன்.

ओं दक्षिणामूर्तये नमः ॥

सर्वज्ञो ब्रह्मपुत्रैः सनकमुनिमुखैरर्थितो वेदमूर्ध्ना
वेद्यं तद्ब्रह्म गुह्यं करतलकृतचिन्मुद्रयाऽऽवेदयन्यः ।
मौनी मूलं वटस्य श्रित उरुकरुणो दक्षिणास्यः श्रितानां
क्षेमं ध्यायत्यजस्रं जनयितुमिव तं स्तौमि कैलासनाथम् ॥

தக்ஷிணாமூர்த்தி

32. பிரஹ்மாவின் புதல்வர்களான ஸநகர் முதலிய நாலு முனிவர்களால் பிரார்த்திக்கப்பெற்றவரும் எல்லாமறிந்தவராயும் வேதத்தின் அந்தமான உபநிடதங்களால் அறியத்தகுந்த இரகசியமான பிரம்மஸ்வரூபத்தைக் கையிலிருக்கும் சின் முத்திரையால் விளக்கிக் காட்டுகிறவரும் ஆலமரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு மௌனத்துடன் தென் முகமாய் கருணையுடன் வீற்றிருந்து தமது அடியார்களுக்கு க்ஷேமத்தை யுண்டுபண்ணும் வழியைக் கவனிப்பவர் போலிருக்கும் கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கிறேன்.

ओं योगदक्षिणामूर्तये नमः ॥

सर्वैः संपूजनीयः सनकमुखमुनिप्रार्थितो दक्षिणास्यः
योगं तस्याहतस्याचरणमपि फलं संशयं संविदार्य ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



सम्यक् प्रोवाच लोके द्रुतलमधिवसन् विस्तरेण क्षणं तं
हित्वा कैलासनाथं मम मन इतरं नाश्रयस्वाविचारम् ॥

யோக தக்ஷிணமூர்த்தி

33. எல்லோர்களாலும் பூஜிக்கத் தகுந்தவரும் ஸநகர் முதலிய ரிஷிகள்ால் வேண்டிக்கொள்ளப்பெற்றவரும் மரத்தடியில் தென்முகமாய் வீற்றிருந்து யோகங்களின் இலக்ஷணமும் இடையூறில்லாமல்அந்த யோகத்தை நடத்துவதின்வழியும் அதனாலுண்டாகும் பயனும் எல்லாவற்றையும் விரிவாய் சந்தேகமற உபதேசித்தவருமான கைலாஸநாத சுவாமியைத் தவிர வேறிடத்தில் ஹே மனமே நீ யோஜனையின்றிப் போக வேண்டாம்.

ओं वीणादक्षिणामूर्तये नमः ॥

वीणाया लक्षणं तत्सकलमपि चिरात् ज्ञातुकामैर्मुनीन्द्रै-
स्तुम्बुर्वाद्यैः स्तुतो यः सपदि निजकरे कच्छपीमादधानः ।
गायन् दण्डं निबद्धप्रगुरुकिसलयं पुष्पितं च प्रकुर्वन्
जीवानानन्दभाजोऽकुरुत य इह तं स्तौमि कैलासनाथम् ॥

வீணா தக்ஷிணமூர்த்தி

34. வீணையின் இலக்ஷணம் எல்லாவற்றையும் வெகுகாலமாய் அறிய விருப்பமுள்ள தும்புரு முதலிய மகரிஷிகளால் துதித்து பிரார்த்திக்கப் பெற்றவரும் உடனே தன் திருக்கரத்தில் வீணையை யெடுத்துக் கொண்டு தான் இயற்றும் ஸ்வர விசேஷத்தால் வீணை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



யின் தண்டம் அதிகமான தளிர்களையும், புஷ்பங்களையும் அடையும்படி கான ரஸத்தை உண்டுபண்ணி அதனால் எல்லா ஜீவகோடிகளுக்கும் பிரம்மாநந்தத்தை அடைவித்த கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கிறேன்.

ओं कालान्तकमूर्तये नमः ॥

नेत्रेणाग्निस्फुलिङ्गान् बहिरिव वमता निर्दहन्सर्वलोकान्
क्रुद्धः कालो मृकण्डोस्तनयमपभयं पूजयन्तं महेशम् ।
पाशेनाबध्य कर्षन्नुरसि विनिहता वामपादेन येन
स्वास्त्रेणाकार्यपासुः स पदनतमवत्वद्य कैलासनाथः ॥

காலாந்தக மூர்த்தி

35. நெருப்புப் பொறிகளை வெளியிற் கக்கிக் கொண்டிருப்பதுபோல் பயங்கரமான கண்களால் எல்லா உலகங்களையும் எரிக்கிறவனும் கோபத்துடன் பயமில்லாமல் சிவபூஜை செய்துகொண்டிருக்கும் மார்க்கண்டேயனை பாசக்கயிற்றால் கட்டியிழுப்பவனுமான யமனைத் தன் இடதுகாலால் மார்பிலுதைத்துச் சூலாயுதத்தால் அடித்துக் கீழே தள்ளி ஸம்ஹரித்த கைலாஸநாத சுவாமி இப்பொழுது தன் திருவடியில் வணங்கின என்னைக் காப்பாற்றட்டும்.

ओं कामदहनमूर्तये नमः ॥

कन्दर्पस्सज्यचापः कमपि सुमशरं स्वस्य नाशाय मुञ्चन्
ललाटाक्षिप्रभूतानल इव शलभो येन भस्मावशेषः ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



विश्वस्यानङ्ग एष स्तुतिभिरथ रते रूपयुक्तस्त्वकारि
क्षेमं नित्यं करोतु द्रुतमिह करुणादृक्स कैलासनाथः ॥

காமதஹன மூர்த்தி

36. கரும்பு வில்லை வளைத்து சுரும்பு நாணைத் தொடுத்து தான் நாசமடைவதின் பொருட்டே ஒரு மலரம்பை பிரயோகித்தவனையும் நெற்றிக்கண்ணில் இருக்கும் அக்னியில் விளக்கில் விட்டில்பூச்சிபோல் சாம்பலானவனும் உலகத்துக்கு அனங்கனைப் சரீர மில்லாமலிருக்கும்படி மன்மதனை செய்தும் பிறகு ரதி தேவியின் துதியால் ஸந்தோஷமடைந்து ரதிதேவிக்கு ரூபத்துடனிருக்கும்படி செய்தவருமான கருணை தங்கிய பார்வையுள்ள கைலாஸநாத சுவாமி நமக்கு எச்சமயத்திலேயும் க்ஷேமத்தைச் செய்யவேணும்.

ओं लकुलेश्वरमूर्तये नमः ॥

रश्मिप्रद्योतमानं भुवनमकुटसद्रत्नभूषायमाणं
विख्यातं पुण्यवद्भिर्लकुलमधिगतं विस्तृतं यत्समन्तात् ।
तस्मिन्नध्यासमानं विविधमणिकृतं विष्टरं विश्वभाजां
कारुण्याऽऽर्द्रं गुरुं तं मदवननिपुणं स्तौमि कैलासनाथम् ॥

லகுளேச்வர மூர்த்தி

37. ஒளி மிகுந்து பிரகாசிக்கிறதும், உலகங்களுக்கு சிரஸில் தரிக்கும் இரத்னாபரணம்போல் விளங்குகிறதும் புகழ் மிக்கதும் நாலாபக்கங்களிலும் விஸ்தீரணமாயும் புண்ணியவான்களிருக்கும்படியான

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



லகுளமென்னும் உலகத்தில் நவரத்தினங்களால் இழைக்கப்பெற்ற ஸிம்மாஸனத்தில் வீற்றிருப்பவனும் உலகத்தார்களுக்கு கருணை தங்கிய குருவும் என்னைக் காப்பாற்றுவதில் ஸாமர்த்தியமிக்ககைலாஸநாத ஸ்வாமியை யான் துதிக்கின்றேன்.

ओं भैरवमूर्तये नमः ॥

सन्मार्गे गन्तुमन्धं प्रबलवरबलं नामतोऽप्यन्धकं यः
प्राप्तश्रीभैरवस्याऽऽकृतिमथ निशिते प्रोतमाबध्य शूले ।
प्रीतस्तस्माद्विमोच्य स्तुतिभिरवनतं सैनिकेशं चकार
स्तुन्वन् कैलासनाथं सद्वननिरतं सन्ततं तं निषेवे ॥

பைரவ மூர்த்தி

38. குருடனைப்போல நல்வழியில் நடக்கத் தெரியாதவனும், வரங்களைப்பெற்று அதிகமான பலத்தையடைந்தவனும், அந்தகனென்று பெயர் பெற்றவனுமான அசுரனைக் கூர்மையான தன் சூலாயுதத்தில் குத்திக் கோர்த்தும், பிறகு திருவடியில் வணங்கித் தோத்திரம் செய்யும் அவ்வசுரனை அதிலிருந்து விடுவித்து தனக்குச் சேனைத் தலைவனுகவும் செய்து கொண்ட பைரவ வடிவத்தை யடைந்தவரும் ஸாதுக்களைக் கார்க்க ஆவலுள்ளவருமான கைலாஸநாத ஸ்வாமியைத் தோத்திரம் செய்துகொண்டே யான் எப்பொழுதும் வணங்குகின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



ओं आपदुद्धारणमूर्तये नमः ॥

आपत्तीरापतन्तीरचलवदचला आत्मनः संनिहन्तुं
पौलोमीशादिदेवैस्सततमभिनुतं चापदुद्धारकं नः ।
हस्ते दण्डं कपालं नरवरकवचैरावृतं सेवकानां
रूपं वाञ्छाऽनुरूपं दधतमहरहस्स्तौमि कैलासनाथम् ॥

ஆபதுத்தாரண மூர்த்தி

39. மலைபோல் அசைக்க முடியாமல் தனக்கு வரும் பெரும் ஆபத்துக்களை உடனே அழிக்கவேண்டி இந்திரன் முதலிய தேவர்கள் எக்காலத்திலும் தோத்திரம் செய்யும் பெருமை வாய்ந்தவரும் நமது இடுக்கண்களைத் தீர்த்துவைப்பவரும் கையில் தண்டு, கபாலம் இவைகளைத் தரித்தவரும் மானிடர்களைக் கவசம் போல் சரீரத்தில் அணிந்தவரும் அடியார்கள் விரும்பியபடி உருவங்களை ஏற்பவரும் ஆபதுத்தாரண ரென்று பெயர்பெற்ற கைலாஸநாத சுவாமியை நாள் தோறும் யான் துதிக்கிறேன்.

ओं वटुकमूर्तये नमः ॥

कृत्वा तीव्रं तपश्च प्रवरवरमथाऽसाद्य नित्यं सुरेभ्यो
द्रुह्यन्तं मुण्डदैत्यं तनयमपभयं दुन्दुभेरात्मवध्यम् ।
यः स्वीकृत्याखिलेशो वटुकवपुरसौ सञ्जहारामराणां
रक्षायां लम्पटं तं मम हृदय गतिं याहि कैलासनाथम् ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



வடுக மூர்த்தி

40. கடுந்தவம்புரிந்து அதிக வரங்களைப் பெற்று எப்பொழுதும் தேவர்களுக்குத் தீங்கு செய்கிறவனும் துந்துபியின் புத்திரனும் தன்னால் ஸம்ஹரிக்கத் தகுந்தவனுமான முண்டனென்னும் அசுரனை வடுக வடிவத்தைப்பெற்று ஸம்ஹரித்தவனும் தேவர்களை இரக்ஷிக்க ஆவலுள்ளவனும் ஸர்வேசுவரனுமான கைலாஸநாத சுவாமியை ஹே மனமே நீ சரணம் அடைவாய்.

ओं क्षेत्रपालकमूर्तये नमः ॥

निष्प्रत्यूहं समस्तं भुवनमविकलं व्याप्नुवद्भिः पयोभि-
र्लीने वस्तुन्यशेषे निरवधितमसा सर्वतो व्याप्तलोके ।
कारुण्यैकाधिवासः पुनरिदमखिलं संसृजन्पालयंश्च
ख्यातिं कैलासनाथो दिवि भुवि विदधावित्ययं क्षेत्रपालः ॥

க்ஷேத்ரபாலக மூர்த்தி

41. அகில புவன முழுவதும் தடங்கலன்னியில் ஜலம் சூழ்ந்துகொள்ள எல்லாப் பொருளும் ஜலத்தினால் நாசமடைய மிகுந்த இருளும் வியாபிக்க அது சமயம் இவ்வுலகம் எல்லாவற்றையும் கருணையால் மறுபடியும் சிருஷ்டித்து முன்போல் காப்பாற்றி பூமியிலும் சுவர்க்கத்திலும் க்ஷேத்திரபாலகரென்று புகழ்பெற்று கைலாஸநாத சுவாமி விளங்குகின்றார்.

ओं वीरभद्रमूर्तये नमः ॥

स्वर्गं कृत्वा स्ववश्यं प्रबलवरबलाद्दादितेयान्निहन्तुं
प्राप्तानप्यात्मगेहं सुरमुनिवचसा वीरमार्ताण्डदैत्यम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



स्वस्याभ्याशं जवेनागतमपि तमहन् वीरभद्राकृतिर्यो
वन्दे कैलासनाथं प्रणतगदहरं दीनबन्धुं सदा तम् ॥ ४२ ॥

வீரபத்ர மூர்த்தி

42. பிரஹ்மாவின் வரத்தால் ஸ்வர்கத்தை வசமாக்கிக்கொண்டு தன்னிடத்தில் பயத்தால் கைலாஸத்தில் வந்து ஒளிந்துகொண்டிருக்கும் தேவர்களை நாரத முனிவர் சொல்லத் தெரிந்துகொண்டு தனக்கு முடிவு காலம் நேரிட்டதால் மறுபடியும் உபத்திரவம் செய்ய வேகமாய்த் தன் அருகிலும் வந்த வீரமார்த்தாண்டனென்னும் அசுரனை தான் வீரபத்திர வடிவம் பூண்டு ஸம்ஹரித்தவரும் வணங்கினவர்களின் ரோகத்தை நிவர்த்திப்பவரும் தீனர்களுக்குத் துணைவருமான கைலாஸநாத சுவாமியை யான் எக்காலமும் வணங்குகின்றேன்.

ओं अघोरास्त्रमूर्तये नमः ॥

अस्त्रेणाघोरनाम्ना रिपुमतिदुरितं प्रापकेण द्युलोकं
संदृप्तस्सप्ततन्तुर्बलवदभिहतो वीरभद्रेण येन ।
माङ्गल्यप्रार्थिनीभिस्तदनु युवतिभिस्तस्य संप्रार्थितेन
प्रीत्याऽगोपायि चैनं सततमवहितः स्तौमि कैलासनाथम् ॥

அகோராஸ்த்ர மூர்த்தி

43. பாபமே குடிகொண்ட சத்துருக்களையும் சுவர்க்கலோகம் சேர்ப்பிவிக்கும் தனது அகோரமென்னும் அஸ்திரத்தினுல் பலமாய் கர்வமுள்ள ஸப்த தந்து அசுரனை அடித்தவரும் பிறகு மாங்கல்யபிக்ஷை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



கேட்கும் அவனுடைய ஸ்திரீகளால் பிரார்த்திக்கப் பெற்று தயவினால் ஸப்ததந்து வென்னும் அசுரனைக் கார்த்தவருமான வீரபத்திரவடிவம் பூண்ட கைலாஸ நாதசுவாமியை எப்பொழுதும் யான் பயபக்தியுடன் துதி செய்கின்றேன்.

ओं दक्षयज्ञहरमूर्तये नमः ॥

दाक्षायण्याऽर्थितोऽभूज्जनककुपितया वीरभद्रं तृतीया-
दुत्पाद्याक्ष्णः करालं द्रुतरिपुममुना दक्षमात्मापराद्धम् ।
ग्रीवायामच्छिनद्यः पुनरजशिरसञ्जीवयामास नित्यं
यज्ञघ्नं तं शरण्यं व्रज गतिमनिशं भाव कैलासनाथम् ॥

தக்ஷயஜ்ஞ ஹர மூர்த்தி

44. தகப்பனிடத்தில் கோபமடைந்த தாக்ஷாயணியால் பிரார்த்திக்கப் பெற்று தன் மூன்றுவது கண்ணிலிருந்து சத்துருக்களை விரட்டி அடிப்பவரும் பயங்கரரான வீரபத்திரனை உண்டுபண்ணி அவனால் தனக்கு அபராதம் செய்த தக்ஷனை கழுத்தில் இரண்டாய் சேதித்தவரும் பிறகு தயை கூர்ந்து ஆட்டுத்தலையை வைத்துப் பிழைக்கும்படி செய்தவரும் தக்ஷ யாகத்தை அழித்தவரும் எல்லோருக்கும் ரக்ஷகருமான கைலாஸநாத சுவாமியை ஹே மனமே! நீ எப்பொழுதும் சரணமடைவாய்.

ओं किरातमूर्तये नमः ॥

त्रातुं बीभत्सुमात्मप्रियमसुहृदयप्रेषितान्मूकदैत्यात्
अस्त्रेणानुग्रहीतुं शबरवरतनुश्चापबाणौ कराभ्याम् ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



गृह्णन्नुन्मूलितारिश्श्रुतिभिरभिवृतस्सारमेयैश्चतुर्भि-
र्भिल्याकृत्या च देव्या विपिनमनुगतः प्राप कैलासनाथः ॥

கிராத மூர்த்தி

45. சத்துருவான துரியோதனனால் அனுப்பப்பெற்ற மூகாசுரனிடத்திலின்றும் தன் அன்பனை அர்ஜுனனைக் காப்பாற்றவும், தன் அஸ்திரமான பாசுபதாஸ்திரம் கொடுத்து அனுக்கிரகிக்கவும் வேட வேஷம் தரித்து பாணம், வில்லு இவைகளைக் கையில் எடுத்துக்கொண்டு நான்கு வேதங்களும் நாய்களாய் நான்கு பக்கத்திலும் சூழ்ந்துவர வேடஸ்திரீ உருவம் கொண்டு அம்பாள் பின்தொடர்ந்துவர கைலாஸநாதசுவாமி காட்டிற்கு இத் திருக்கோலத்துடன் வந்தார்.

ओं गुरुमूर्तये नमः ॥

यस्मात्तत्त्वं बुभुत्सुश्चिरमिह तपसा क्लेशयत्यात्मगात्रं
विद्वान्नित्यं स एव स्वयमुरुकरुणो देशिको वृक्षमूले ।
माणिक्यायोपदेष्टुं समयमभिलषन्नीक्षते स्माऽऽनतानां
वश्यः कैलासनाथो वचनहृदययोर्भाति नास्य प्रभावः ॥

குரு மூர்த்தி.

46. உலகத்தில் வித்வானும் எவரிடம் தத்வோபதேசம் பெறத் தினந்தோறும் கஷ்டத்துடன் தவம் செய்துவருகிறானே அந்த பெருமைவாய்ந்த குரு தானே அதிகக்கருணையுடன் ஆசிரியனாயிருந்துகொண்டு மரத்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



தடியில் மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்ய அவர் ஸமயத்தை எதிர்பார்த்தாராதலால் அடியார்களுக்குச் சுவாதீனமான இந்த கைலாஸநாத சுவாமியின் பெருமை, மனத்திற்கும், வாக்கிற்கும் எட்டாதிருக்கிறது.

ओं अश्वाऽऽरूढमूर्तये नमः ॥

राजद्रव्यैरसंख्यैर्निलयविरचनां कुर्वतो निर्विचारं
स्वस्य क्लिष्टस्य दण्डैस्तदनु नृपकृतैर्भूस्थमीनायितस्य ।
माणिक्यस्यापनेतुं व्यसनमुपनतं त्यागराण्मायिकाश्वान्
व्यक्रीणादश्वसादी भुवि नरपतयेऽप्येष कैलासनाथः ॥

அச்வாருட மூர்த்தி

47. கணக்கில்லாத இராஜாவின் திரவியங்களால் கவலையின்றித் தனக்கு ஆலயத்தைக் கட்டி வைத்தவனும், பிறகு அரசன் செய்யும் சிக்ஷைகளால் பூமியிலிருக்கும் மீன்போல் பிராணவேதனையடைந்தவனுமான, மாணிக்கவாசகரின் அளவில்லாக் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டுத் தான் தியாகராஜாவென்று பெயர்பூண்ட இந்தக் கைலாஸநாதசுவாமி பூமியில் ஒரு அரசனுக்காகப் பொய்க் குதிரைகளை விற்றார்.

ओं गजान्तिकमूर्तये नमः ॥

श्वेतारण्यं समेत्य स्वपदकृतहृदं शूरनिर्भिन्नदन्तं
संक्लिष्टं स्वर्गजञ्च स्वयमलघुजवेनाजगामेष्टदायी ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



हस्तेनामृश्य शुण्डां गजवदनगुहालभ्यसौख्यं वितन्वन्
योऽस्मान् कैलासनाथस्सुचरितसुलभस्सोऽनिशं पातु पापात् ॥

கஜாந்திக மூர்த்தி

48. திருவெண்காடென்னும் க்ஷேத்திரத்தில் மனதால் தன் திருவடியை தியானித்துக்கொண்டு சூரனால் தந்தங்கள் ஒடிக்கப்பெற்று மிகவும் கஷ்டமடைகிற ஐராவதத்திற்கு இஷ்டத்தைக் கொடுக்கத் தானே அதிக வேகத்துடன் வந்தவரும் கையால் துதிக்கையைத் தடவிக்கொடுத்துக் கணபதியும், சுப்பிரமணியரும், இதுவரை அடையாத சௌக்யத்தையடையும்படி செய்தவரும் புண்ணியவான்களுக்கு அருள்சுரக்கும் கைலாஸநாத சுவாமி நம்மைப் பாபத்திலிருந்து பாதுகாக்கட்டும்.

ओं जलन्धरवधमूर्तये नमः ॥

वृद्धाकारेण येन त्रिदशपतिहितेनैकपादेन भूमौ
कीर्णं चक्रं स्वशीर्षे वहति यदि भवान् वीर इत्युक्त एव ।
वृन्दानाथो जडस्तत्प्रसभमपि करेणोद्धरंस्तेन कृत्तः
कण्ठे द्वेधा जलंधृन् स्तुहि तमिह सदा भाव कैलासनाथम् ॥

ஜலந்தரவத மூர்த்தி.

49. தேவேந்திரனுக்கு நன்மைசெய்யக் கருதி விருத்த வேடம் பூண்டவரும், ஒரு காலால் பூமியில் ஒரு சக்கிரமெழுதி அதை நீ தூக்கி உன் தலையில் வைத்துக்கொண்டால் பலசாலி தானென்று சொல்லி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

முட்டாளான பிருந்தையின் புருஷனான ஜலந்தராசுரனை நம்பச்செய்து அவ்விதமே பலாத்காரமாய்த் தூக்கும்படி செய்து அதே சக்கிரத்தினால் ஜலந்தராசுரனை கழுத்தில் இரு துண்டாய் அறுத்துப் போட்டவருமான கைலாஸநாத சுவாமியை ஹே மனமே இந்த உலகத்தில் எச்சமயத்திலேயும் நீ துதிப்பாய்.

ओं एकपादत्रिमूर्तये नमः ॥

सूक्ष्मं मायाविमुक्तं विभु निरतिशयाऽऽनन्दरूपं वपुर्यः
प्राप्यान्ते स्वस्य पार्श्वाद्विधिदनुजरिपू दक्षिणाद्वामतश्च ।
चन्द्रार्काग्नीन् स्वनेत्रादृषिकुलममरान् रोमकूपाद्विधाया-
ऽऽभात्येकाङ्घ्रिस्त्रिमूर्तिस्सततमवतु मामेष कैलासनाथः ॥

ஏகபாத த்ரிமூர்த்தி.

50. பிரளய காலத்தில் மாயையிலிருந்து விடுபட்டு சூக்ஷ்மமாயும், எங்கும் வியாபித்ததாயும் எல்லையில்லாத பேரானந்த ரூபமாயுமிருக்கும் சரீரத்தையடைந்து தன் வலது பக்கத்திலிருந்து பிரமனையும் இடது பக்கத்திலிருந்து விஷ்ணுவையும், கண்களிலிருந்து சூரியன், சந்திரன், அக்னி இவர்களையும் மயிர்க்காம்புகளிலிருந்து தேவர்களையும், ரிஷிகளையும், உண்டுபண்ணி ஒரு திருவடியுடனும், மூன்று சரீரத்துடனும் விளங்கிக்கொண்டிருக்கும் கைலாஸநாத சுவாமி எப்பொழுதும் என்னை இரக்ஷிக்கவேணும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



ओं त्रिपादत्रिमूर्तये नमः ॥

लोकेऽप्युद्वेजितेऽस्मिन् तुलितकरिकराऽऽसारमुग्भिः पयोदै-
र्निष्टप्ते कोटिसूर्यैर्युगपदुदयगैर्नामशेषीकृते च ।
कल्पान्ते फालनेत्रप्रभवशिखिशिखाप्लुष्टविध्यच्युतौ यः
कृत्वा स्वस्मिन्निलीनौ त्रिचरणसहितोऽभूत्स कैलासनाथः ॥

த்ரிபாத த்ரிமூர்த்தி

51. பிரளய காலத்தில் யானைத் துதிக்கைக் கொப்பான பெருந்துளியாக மழை பெய்யும் மேகங்களால் இந்த உலகமெல்லாம் நனைக்கப்பெற்றும் ஒரே காலத்தில் கோடி சூரியர்கள் உதித்து அவர்களால் உலகெல்லாம் தபிக்கப்பெற்றும் பெயர் மாத்திரம் மிஞ்சும்படி நாசமடையத் தன் நெற்றிக்கண்ணினின்று வெளிவந்த அக்னி ஜ்வாலையால் பொசுக்கப் பெற்ற பிரமனையும், விஷ்ணுவையும், தன்னிடத்தில் சேர்த்து மறைத்துக்கொண்டு மூன்று திருவடிகளோடு கைலாஸநாத சுவாமி விளங்கினர்.

ओं एकपादमूर्तये नमः ॥

ओंकारस्यैकवाच्यश्श्रुतिशतगदिताखण्डशक्तिर्युगान्ते-
ऽप्येको नित्यः प्रणष्टेऽखिलजगति विभुर्यो विभात्येकपादः ।
मूर्तिर्यस्यावनिः खं रविशशिमरुतो वारिवह्नी च यज्वा
कालो यस्माद्बिभेति प्रणतहितममुं स्तौमि कैलासनाथम् ॥

ஏகபாத மூர்த்தி.

52. பிரணவத்தின் பொருளாயும், அநேக சுருதி



CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



களினால் சொல்லப்பெற்றும் பூர்ண சக்தி வாய்ந்தவராயும், பிரளய காலத்தில் ஒருவராயும், அழிவற்றவராயும், சகல உலகமும் அழிந்திருக்கும்போது தான் ஒரு திருவடியுடன் விளங்குகிறவராயும், பூமி, ஆகாயம், சூரியன், சந்திரன், வாயு, அக்னி, ஜலம், யாகம் செய்யும் தீக்ஷிதர், இவர்களைச் சரீரமாய் உடையவரும், இயமனையும் பயமடைவித்தவரும் அடியார்களுக்கு நன்மையை விளைவிப்பவருமான கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கிறேன்.

ओं गौरीवरप्रदमूर्तये नमः ॥

शुंभं वध्यं स्त्रियैव प्रधृतविधिवरास्तोकवीर्यं निहत्या-
ऽऽज्ञप्ता गौरी च येनाहितकुलशमनायाऽऽदधाना करालम् ।
गात्रं हेतिं च विन्ध्याचलमधिवसति स्माऽऽनतानामभीष्टं
दातुर्निर्निद्रमार्यं तमनुदिनमहं स्तौमि कैलासनाथम् ॥

கௌரீ வரப்ரத மூர்த்தி

53. பிரமன் வரத்தால் அதிக பலம் பெற்றவனும் பெண்ணினாலேயே மரணமடைய வேண்டியவனுமான சும்பாசுரனை கொல்லும்படியும், சத்துருக்களின் வேரையறுக்கப் பயங்கரமான உருவத்தையும், ஆயுதத்தையும், தரித்துக்கொண்டு விந்தியாசலத்தில் வீற்றிருக்கும்படியும், கௌரிக்கு உத்தரவு அளித்தவரும் தூங்காமல் விழித்திருந்து அடியார் விரும்பினதைக் கொடுப்பவரும் பூஜிக்கத் தகுந்தவருமான கைலாஸநாத சுவாமியைத் தினந்தோறும் யான் துதிக்கிறேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai



ओं चक्रदानस्वरूपमूर्तये नमः ॥

यस्याभ्यर्चां वितन्वन् दशशतगुणितान्याहरन्पङ्कजानि
प्रेक्ष्यैकं न्यूनमन्तर्हितमपि नयनं स्वीयमुत्पाट्य दत्वा ।
यस्मात्तुष्टादवापाहितजनशमनं शार्ङ्गधन्वा स्वकीयं
चक्षुश्चक्रं च दिव्यं तमिह निखिलदं स्तौमि कैलासनाथम् ॥

சக்ரதானஸ்வரூப மூர்த்தி

54. நாடோறும் தன்னை ஆயிரங் கமலங்களால் பூஜிப்பவரும் ஒரு நாள் ஆயிரத்தில் ஒரு கமலம் மறைக்கப்பெற்று குறைந்துபோகக் கமலம்போலிருக்கும் தன் கண்ணைப் பிடுங்கிப் பகவான் திருவடியில் வைத்து பூஜித்தவருமான விஷ்ணுவுக்கு எல்லா சத்துருக்களையும் விரைவில் ஸம்ஹரிக்கும் சக்ராயுதத்தையும், அவரது கண்ணையும் திருப்பிக்கொடுத்தவரும் இவ்வுலகில் எல்லாவற்றையும் கொடுப்பவருமான கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கிறேன்.

ओं गौरीलीलासमन्वितमूर्तये नमः ॥

स्वस्याभावेन लोकान्क्षणमपि च जडान् दर्शयन्जीवहीनान्
तादृक्पापं प्रमार्ष्टुं भुवि निजदयितां दक्षपुत्री भवेति ।
लीलालोलोऽनुशास्य प्रधृतनरतनुः प्रीणयामास गौरीं
यस्तं नित्यं निषेवे शिरसि धृतकरो भद्रकैलासनाथम् ॥

கௌரீலீலா ஸமந்வித மூர்த்தி

55. உலகத்தை விட்டு இமைநேரம் தான் விலகி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



இருந்து எல்லா உலகங்களும் ஜடமாயும் ஜீவனில்லாமலும் மரித்ததுபோலிருப்பதைத் தன் மனைவிக்குக் காட்டி அந்தப் பாபம் விலகப் பூமியில் தக்ஷனுக்குப் புதல்வியாகப் பிறக்கும்படி உத்தரவு செய்து தானும் லீலாபுருஷனாய் வரனுடைய வேடம் பூண்டு கௌரியை மணந்து சந்தோஷிக்கச் செய்த மங்கள வடிவான கைலாஸநாத சுவாமியை அநுதினம் யான் என் சிரமேற் கரங்கூப்பிச் சேவிக்கிறேன்.

ओं विषापहरणमूर्तये नमः ॥

मथ्नद्भिः क्षीरवार्धिं सुरदितितनयैर्मन्दरेणामृताय
प्रेक्ष्योत्पन्नं करालं गरलमतिभिया प्रद्रवद्भिस्समन्तात् ।
देव्या च प्रार्थितो यो विषमपि भगवान् प्राश्य कण्ठे दधार
क्षेमं लोकस्य कुर्वन् मणिमिव तमहं स्तौमि कैलासनाथम् ॥

விஷாபஹரண மூர்த்தி

56. அமிருதத்தின் பொருட்டு தேவர்களும் அசுரர்களும் மந்தர பர்வதத்தை மத்தாக வைத்துக் கொண்டு திருப்பாற் கடலைக் கடையும்பொழுது அதி விருந்து பயங்கரமாய் வெளியில் வந்த காளகூட விஷத்தைப் பார்த்த சகலரும் பயந்து நான்குபுறத்திலும் ஓட தேவியும் பிரார்த்திக்க பகவான் தனக்கு உள்ளும் புறமுமிருக்கும் உலகம் அழியாதிருக்கும்படி அந்த விஷத்தைத் தான் உட்கொண்டு விழுங்கிவிடாமல் நீலமணியைப்போற் கழுத்தில் தரித்துக்கொண்டு உலகத்தைக் காத்த கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai



ओं गरुडान्तिकमूर्तये नमः ॥

द्वारेऽवस्थाप्य तार्क्ष्यं रजतगिरिमथाऽऽरुह्य देवं ददर्श
श्रीशः पक्षी विनिन्दन् शिवमपि वृषभोच्छ्वासनिश्वासवातैः ।
आक्रोशन्माधवेति प्रसभमभिहतो वात्ययेवाथ तूलः
येनामोचि द्रुतं तं गरुडनिकटगं स्तौमि कैलासनाथम् ॥

கருடாந்திக மூர்த்தி

57. வாசலில் கருடனை நிறுத்தி கைலாஸ பர்வதத்தினுட் சென்ற விஷ்ணு, பகவானைத் தெரிசனம் செய்ய, அப்பொழுது விஷ்ணு வரத் தாமதித்ததால் கோபித்து சிவனை நிந்தித்த கருடன் நந்திகேசுவரர் கோபத்தால் விடும் உச்சுவாஸ நிச்சுவாஸக் காற்றால் இங்குமங்கும் நொய்யப் பஞ்சைப்போல் அடிபெற்று வருந்தி மாதவா, என்று கதறவும் ஓடி வந்து கருடனை அவ்வாபத்திலிருந்து விடுவித்த கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கின்றேன்.

ओं ब्रह्मशिरश्छेदमूर्तये नमः ॥

देवेष्वाद्यो विनाशप्रभवविरहितो जीवहृद्देशनिष्ठः
स्रष्टुर्गर्वं प्रमाष्टुं निजकरनखराग्रेण शीर्षं तदीयम् ।
चिच्छेदोपात्तभीमाकृतिरखिलसुरान् भैरवो यः प्रहर्षं
निन्ये कैलासनाथं सकरुणमनसं लोकरक्षं निषेवे ॥

ப்ரஹ்ம சிரச்சேத மூர்த்தி

58. தேவர்களுக்குள் முந்தினவரும் பிறப்பிறப்பு இல்லாதவரும், பிராணிகளின் மனதில் வசிப்பவரும்,

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



கர்வமடைந்த பிரஹ்மாவின் தலையை தன் கையின் நக நுனியாற் சேதித்தவரும், அதிபயங்கரமான பைரவ வேடம் பூண்டவரும் எல்லாத் தேவர்களுக்கும் சந்தோஷமளித்தவரும் கருணையுடன் உலகத்தைக்காப் பாற்றுகிறவருமான கைலாஸநாத சுவாமியை யான் சேவிக்கிறேன்.

ओं कूर्मसंहारमूर्तये नमः ॥

दुग्धांभोधावुपात्तातनुकमठतनु श्रीपतिक्षोभवृद्धे
लोके मग्नेऽतिभीतैरमरपतिमुखैः प्रार्थितो यो निलिम्पैः ।
भित्वा पृष्ठं तदीयं कठिनमपि निजेनायुधेनोग्रवीर्यो
हारे हीराय धत्ते द्रुतमखिलमुदे पातु कैलासनाथः ॥

கூர்மஸம்ஹார மூர்த்தி

59. பெரிய ஆமையின் உருவத்தை அடைந்த விஷ்ணுவின் வளர்ச்சியால் திருப்பாற்கடல் கரைபுரள அதில் உலகம் முழுக இந்திரன் முதலிய தேவர்கள் பயந்து தன்னை பிரார்த்திக்க உடனே தான் அதிக பலத்துடன் தன் ஆயுதத்தினால் மிகக்கடினமான ஆமையின் முதுகெலும்பைப் பிளந்து கையிலெடுத்து எல்லோரும் ஸந்தோஷம் அடையும்படி கழுத்தில் மாலையின் நடுநாயகமாய்த் தரித்துக் கொண்டிருக்கும் கைலாஸநாதசுவாமி நம்மைக் காக்கட்டும்.

ओं मत्स्यसंहारमूर्तये नमः ॥

जित्वा ब्रह्माणमस्माच्छ्रुतिचयमपनीयाऽऽशु कुत्रापि लीनं
संहर्तुं सोमकं तं धृतशफरवपुर्नीराधिं यो विवेश ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal



जालेनाबध्य विष्णुं शबरतनुरमुं तद्दृशं पाटयित्वा
शस्त्रेण स्वाङ्गुलौ तां धरति सुरमुदे दिव्यकैलासनाथः ॥

மத்ஸ்யஸம்ஹார மூர்த்தி

60. பிரமனை ஜயித்து அவரிடமிருந்து வேதங்களை அபகரித்துக்கொண்டு சீக்கிரமாய் சமுத்திரத்தில் மறைந்தவனான ஸோமகனை ஸம்ஹரிக்க மத்ஸ்யரூபம் கொண்டு சமுத்திரத்தில் போய் ஸம்ஹரித்து கர்வமடைந்து உலகத்துக்குத் தன்பத்தை விளைவித்த விஷ்ணுவை வலையால் கட்டி அவரது கண்களை ஆயுதத்தால் பிடுங்கித் தேவர்கள் சந்தோஷமுறத் தன் விரலால் தரித்துக்கொண்டும் வேட வேடம்பூண்ட கைலாஸநாதசுவாமி இருக்கிறார்.

ओं वराहसंहारमूर्तये नमः ॥

वाराहं प्राप्य वर्ष्माचलनिभमभयं तं हिरण्याक्षदैत्यं
दंष्ट्राग्रेणाभिहत्याऽवनिमुरगवरे स्थापयामास यस्तम् ।
शूलेनाऽऽताड्य दृप्तं हरिमपि निटिलेऽयं प्रभज्यैकदंष्ट्रां
धृत्वा कैरातरूपो निखिलसुरमुदे भाति कैलासनाथः ॥

வராஹ ஸம்ஹார மூர்த்தி

61. பர்வதம் போன்ற வராகத்தின் உருவத்தையடைந்து பயமில்லாத இரணியாக்ஷ விராக்ஷசனைத் தன் தித்திப்பல்லின் நுனியால் அடித்து அவனிடத்திலிருந்து பூமியைக் கொண்டுவந்து ஆதிசேஷன் முடியில்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



முன்போல் வைத்துப் பிறகு கர்வமடைந்து உலகத்துக்குத் துன்பத்தை விளைவிக்கும் விஷ்ணுவின் ஒரு தித்திப்பல்லை தான் கிராத ரூபத்துடன் பிடுங்கி சூலத்தால் அடித்து எல்லாத் தேவர்களும் சந்தோஷிக்கத் தன் சரீரத்தில் தரித்துக்கொண்டு கைலாஸநாத சுவாமி விளங்குகிறார்.

ओं प्रार्थनामूर्तये नमः ॥

मोहिन्या संयुतोऽगान्मुनिजनललनागर्वभङ्गं विधित्सुः
कन्दर्पप्रोज्वलाङ्गो झटिति तरुवनं भिक्षमाणो गिरीशः ।
श्रुत्वैतत्क्रुद्धभावां सकरुणमनसा सांत्वयन्यः स्त्रयोषां
मच्छक्तिस्त्वं हि गौरी नृषु च हरिरिति स्तौमि कैलासनाथम् ॥

பிரார்த்தனை மூர்த்தி

62. தாருகாவனத்திலிருக்கும் ரிஷிகளின் தவத்தையும், அவர் மனைவிகளின் கற்பையும், பங்கப்படுத்துவதின் பொருட்டு தான் மோகினி வேஷம் பூண்ட விஷ்ணுவோடு மன்மதன்போல் மிக அழகான உருவம் தரித்து பிக்ஷாடனராக தாருகாவனம் போன ஸமாசாரத்தைக் கேட்டு மனதில் கோபமடைந்த தன் மனைவியான ஒப்பிலாவம்பிகையை 'ஸ்திரீகளில் நீயும் புருஷர்களில் விஷ்ணுவும் என்னுடைய சக்தியானதால் உங்களிருவர்களுக்கும் பேதமில்லை' யென்று மனதில் கருணையுடன் சமாதானம் செய்த கைலாஸநாத சுவாமியை யான் துதிக்கின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



ओं रक्तभिक्षाप्रदमूर्तये नमः ॥

कल्पान्ते भैरवो यस्त्रिशिखशितशिखाभिन्नफालस्य विष्णोः
रक्तेन प्रस्नुतेनासितशरदि करस्थे कपालेऽप्यपूर्णे ।
लक्ष्म्या भूम्या निलिंपैर्हरिमपि विनुतो जीवयामास भृत्यं
विष्वक्सेनं स्वशूलोद्ग्रथितमतिमुदा स्तौमि कैलासनाथम् ॥

ரக்தபிக்ஷாப்ரத மூர்த்தி

63. பிரளய காலத்தில் மூன்று தளங்களுள்ள சூலாயுதத்தின் கூரிய நுனியால் விஷ்ணுவின் நெற்றியைப் பிளந்து அதிலிருந்து பெருகும் இரத்தத்தினால் தன் கையிலிருக்கும் கபாலம் அநேக வருஷமாகியும் நிரம்பாமலிருக்க மூர்ச்சையடைந்த விஷ்ணுவை லெக்ஷிமி பூமிதேவி தேவர்களிவர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி காப்பாற்றியும் அவ்விஷ்ணுவின் வேலைக்காரனான விஷ்வக்ஸேனனைத் தன் சூலத்தின் நுனியில் கோர்த்திருந்தாலும், பிறகு விடுவித்து காப்பாற்றினவருமான பைரவ வடிவங்கொண்ட கைலாஸநாத சுவாமியை அதிக சந்தோஷத்தால் யான் துதிக்கின்றேன்.

ओं शिष्यभावमूर्तये नमः ॥

स्कन्देन स्वात्मजेनाखिलसुरपृतनानायकेन प्रजेशे
कारागारं च नीते सुरपतिविनुतो मोचनायात्मयोनेः ।
यः सर्वज्ञोऽधिदेवो गुरुरपि जगतामोंपदार्थं बुभुत्सुः
शिष्यत्वं प्राप सूनोस्तमनुदिनमहं स्तौमि कैलासनाथम् ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



சிஷ்யபாவ மூர்த்தி

64. சகல தேவ சைன்யங்களுக்கும் தலைவனான தன் புதல்வனான சுப்பிரமணியர் பிரமனைச் சிறையிலடைக்கப் பிறகு பிரமனை விடுவிக்கும்படி தன்னை இந்திரன் துதிக்கத் தான் எல்லாமறிந்தவரும் தேவர்களுக்குத் தலைவனாகவும் உலகத்துக்கு ஆசிரியனாயிருந்தாலும், பிரணவத்தின் பொருளை அறியத் தன் புத்திரனுக்குத் தான் சிடனாயிருந்துவந்த கைலாஸநாத சுவாமியை யான் தினந்தோறும் போற்றுகின்றேன்.

फलश्रुतिः ॥

देवस्य त्रिपुरद्विषो भगवतो मूर्तीश्चतुर्भिर्युतां
षष्टिं नित्यमिनोदये जपमनु ध्यायन्ति निश्चिन्तिताः ।
ये तेषां हृदि सुन्दरीसहचरः कैलासनाथः सदा-
ऽभीष्टं वस्तु परत्र जातमिह च प्रेम्णा ददद्भासते ॥

பலச்ருதி

65. முப்புரங்களை யொழித்தவரான சிவபெருமான் செய்த திருவவதாரங்களையும் சூரியோதயத்தில் ஜபம் செய்த பிறகு கவலையின்றித் தியானம் செய்கிறவர்களின் மனதில் இகத்திலும், பரத்திலும், விரும்பினதையெல்லாம் கொடுத்துக்கொண்டு சுந்தரியம்பாளுடன் கைலாஸநாத சுவாமி விளங்குகிறார்.

गोकर्णाभिजनः सतामनुचरः श्लाघ्यं कवित्वं गुरोः
कारुण्येन समेत्य सुन्दर इति श्रीजानकीगर्भजः ।

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal



सुब्रह्मण्यसुधीसुतोऽद्य निवसन्कानाडुकात्तान्पुरे
तत्स्थं देवमुमासखं मधुरयाऽस्तावीत्सुधावद्गिरा ॥

इति श्रीशिवपराक्रमे श्रीकैलासनाथस्तुतिः संपूर्णा ॥

66. திருக்கோகர்ண மென்னும் க்ஷேத்திரத்தில் வசித்திருந்தோனும், இவ்வமயம் கானடுகாத்தானில் வசிப்பவனும், ஜானகி அம்மாளின் கருப்பத்தில் உதித்தவனும், சுப்பிரமணியரென்னும் சாஸ்திரஸம்பந்நரின் புத்திரனுமான சுந்தரேசனென்னும் யான் குருவின் தயையால் அவ்வூரிலிருக்கும் ஒப்பிலாவம்பிகை ஸமேதரான சிவலோகநாதரென்னும் கைலாஸநாத சுவாமியை இத்தோத்திரப் பாக்களால் துதித்தேன்.

---

## ॥ नित्यानुसंधानम् ॥

श्रीगणेशाय नमः ॥

प्रपूजितो यो झटिति व्यपोह्य विघ्नान्नतानां वितरत्यभीष्टम् ।
गौरीमहेशार्भकमाखुवाहं गजाननं तं शरणं प्रपद्ये ॥

1. சர்வ ஜனங்களாலும் நமஸ்காரம் செய்து பூஜிக்கப்பெறுபவரும் மெய்யன்பர்களின் இடையூறுகளை விலக்கிச் சீக்கிரத்தில் விரும்புமவைகளையளிப்பவரும் கௌரி, மஹேச்வரருக்குக் குமாரராயும் மூஷிக வாகனம் பெற்றுக் கஜமுகத்துடன் விளங்கும் பரம்பொருளான ஸ்ரீ கணேசரைச் சரணமடைகின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



श्रीसुब्रह्मण्याय नमः ॥

यः शूरमाजावजयत्स्वशक्त्या सत्याधिपं यो विमुमोच नत्या ।
कारागृहात्तं गुहमादरात्तदारानुरागं शरणं प्रपद्ये ॥

2. சூரபதுமாஸுரனை சக்திவேலென்னும் தனது ஆயுதத்தினால் யுத்தத்தில் ஜெயித்தவரும், தண்டனிட்ட பிரமனைச் சிறையினின்றும் விடுவித்தவரும், தவம்செய்த சுந்தரவல்லி, கஜவல்லியென்னும் இருபெண்களையும் அன்பினால் மணந்தவரும், ஸ்காந்த பிரதிபாத்யருமான ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளை யான் சரணமடைகின்றேன்.

श्रीसरस्वत्यै नमः ॥

माधुर्यतो रूपत एव दुग्धं विजेतृ वस्त्रं वचनं महार्थम् ।
वाणीं दधानां वचसामधीशामनन्यभावः शरणं प्रपद्ये ॥

3. பாலினுந்துய்ய வெண்மையான ஆடையும் பாலினும் மிக்க உருசிகரமான சொற்களையுமுடைய வாகீச்வரியை நான் வேறு சிந்தனையின்றி வணங்குகின்றேன்.

श्रीनन्दिकेश्वराय नमः ॥

विषाणशृङ्गस्फुटिताम्बुदौघं गणाग्रगण्यं नमतां शरण्यम् ।
महाबलं शंकरसान्निधिस्थं नन्दीश्वरं तं शरणं प्रपद्ये ॥

4. தமதிரு கொம்புகளின் நுனியால் மேகமண்டலத்தைப் பிளந்தவரும் பிரமதகணங்களுக்குத் தலைவரும், வணங்குபவர்களைக் காப்பவரும், மிக்க பல

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



முடையவரும், ஈச்வரன் ஸந்நிதியிலிருப்பவருமான நந்திகேசுவரரைச் சரணமடைகின்றேன்.

श्रीदक्षिणद्वारपालकाय नमः ॥

दंष्ट्राकरालाननमुग्रदृष्टिं खड्गं त्रिशूलं करयोर्दधानम् ।
गतिं महादर्पमुमेशभृत्यं तं दक्षिणद्वारपतिं प्रपद्ये ॥

5. தித்திப்பற்களால் பயங்கரமான முகமுடையவரும், உக்கிரமான பார்வையுள்ளவரும் கைகளில் அறிவாள் திரிசூலத்தைத் தரித்தவரும், மிக்கமதமுள்ளவரும் சிவபெருமானின் ஆலயத்தில் வலப்பக்கலில் வீற்றிருப்பவருமான துவாரபாலகரைச் சரணமடைகின்றேன்.

श्रीवामद्वारपालकाय नमः ॥

संदष्टदन्तच्छदमात्तकोपं स्फुरत्स्फुलिङ्गं नयनं मुखं च ।
प्रकम्पितश्मश्रु दधानमन्यद्वाराधिनाथं शरणं प्रपद्ये ॥

6. உதட்டைக் கடித்துக்கொண்டு முகத்திலும் கண்களிலும் தீப்பொறிபறக்க, மீசை துடிக்க மிகுந்த சினத்துடன் சிவபெருமானின் ஆலயத்தில் இடப்பக்கலில் வீற்றிருக்கும் துவாரபாலகரைச் சரணமடைகின்றேன்.

श्रीमहेश्वराय नमः ॥

वृषाधिरूढं रजताचलस्थं भक्तौघवांछासुरजङ्गमद्रुमम् ।
हिमाद्रिजेशं सुकृतिप्रदृश्यं शिवं सदा तं शरणं प्रपद्ये ॥

7. கைலயங்கிரியில் இருப்பவரும் கற்பகத்தருவைப்போல் வேண்டுவார் வேண்டுவனவீய, இடப

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



வாகனத்தின்மீது ஆரோகணித்து மெய்யன்பர்கள் கூட்டத்திற்கு தானே வருபவரும், பார்வதியின் பதியும், புண்யவான்களின் முன்னே தோற்றுபவரும் சுருதிபிரதிபாத்யருமான ஸ்ரீ சிவபெருமானைச் சரணமடைகின்றேன்.

श्रीगौर्यै नमः ॥

श्रियं जनेभ्यः प्रतिपादयन्तीं कटाक्षवीक्षासमकालमम्बाम् ।
आगांस्यनन्तानि च मर्षयन्तीं तुष्टां सदा तां शरणं प्रपद्ये ॥

8. தனது கருணைமிக்க பார்வையோடு கூடவே ஜனங்களுக்குத் செல்வத்தைக் கொடுக்கிறவளும் மாசகற்றிச் சந்தோஷிப்பிக்கிறவளும், தேவீ பாகவத நூலாற் ப்ரதிபாதிக்கக் கூடியவளுமான அம்பாளை எப்பொழுதும் சரணமடைகின்றேன்.

श्रीनटराजाय नमः ॥

भक्तेभ्य इष्टं ददतं पुराणं पुमांसमुत्तुङ्गजटाकलापम् ।
माणिक्यभक्तं शिवकामसुन्दर्युपेतमार्यं नटराजमीडे ॥

9. அன்பர்களின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்கிறவரும், ஆதிபுருஷரும், மிகுந்த ஜடைகளையாபரணமாய் தரித்தவரும், மாணிக்கவாசகரை அன்பராயேற்றருளியவரும், சிவகாமிசுந்தரியுடன் கூடியவரும், பக்தர் பூஜிக்கத் தகுந்தவருமான நடராஜப்பெருமானை யான் துதிக்கின்றேன்.

श्रीसोमास्कन्दाय नमः ॥

मृगं करेणाभयमादधानं विभूषणैर्भूषितमानताङ्गाम् ।
स्मितानन्नं मङ्गलदानशौण्डं सोमागुहं तं शरणं प्रपद्ये ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



10. திருக்கரங்களில் மிருகத்தையும், அபயத்தையும் தரித்தவரும் ஸர்வாபரணாலங்கிருதரும், மந்தஹாசத்துடன் வணங்கினவர்களுக்கு மங்களத்தைக் கொடுக்க வல்லவருமான ஸோமாஸ்கந்தரைச் சரணமடைகின்றேன்.

श्रीदक्षिणामूर्तये नमः ॥

निर्दग्धकामं सनकादिशिष्यज्ञानप्रदं पादनिरस्तदैत्यम् ।
चिन्मुद्रितं पादपमूलवासं गुरुं सदा तं शरणं प्रपद्ये ॥

11. மன்மதனையெரித்து ஸநகாதி முனிவர்களுக்கு ஞானத்தைப் போதித்தவரும் திருவடியில் மாயாசுரனை அடக்கினவரும், சின்முத்திரையுடன் மரத்தடியில் வீற்றிருக்கும் பிரம்ம சொரூபியான குருவைச் சரணமடைகின்றேன்.

श्रीलिङ्गोद्भवाय नमः ॥

वराहमूर्त्या हरिणाऽप्यधस्ताद्धंसस्वरूपेण विरिंचिनोर्ध्वम् ।
अलभ्यपादोत्तमगात्रमीशं लिङ्गोद्भवं तं शरणं प्रपद्ये ॥

12. பன்றி உருவமெடுத்த விஷ்ணுவினால் அடியையும் அன்னத்தின் வடிவெடுத்த பிரம்மாவினால் முடியையும் தேடிக் காணக்கூடாத திருவடியையும் திருச்சென்னியையும் உடையவரும், பிறகு தானே லிங்கரூபமாகத் தோன்றியவருமான லிங்கோத்பவ மூர்த்தியைச் சரணமடைகின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja



श्रीमहाविष्णवे नमः ॥

सुरेन्द्रमुख्यामरवांछितार्थप्रदानबद्धादरमात्तपुण्यैः ।
संस्मर्यमाणं प्रपितामहं तं हरिं शरण्यं शरणं प्रपद्ये ॥

13. இந்திராதி தேவர்களின் இஷ்டத்தை ஆதரவுடன் நிறைவேற்றுபவரும் புண்யவான்களால் தியானிக்கத் தகுந்தவரும் புராணபிரதிபாத்யரும் ப்ரபிதாமஹருமான விஷ்ணுவைச் சரணமடைகின்றேன்.

श्रीमहालक्ष्म्यै नमः ॥

अभ्यासमानां जलजं विनिद्रं लक्ष्मीं गजैः कुम्भकरैर्निषेव्याम् ।
भक्ताय सिद्धेः सपदि प्रदात्रीं कृपानिधिं तां शरणं प्रपद्ये ॥

14. அலர்ந்த அம்புஜமலரில் வீற்றிருப்பவளும், கும்பங்களை துதிக்கையில் தரித்த கஜங்களால் சேவிக்கக்கூடியவளும், பக்தரின் இஷ்டசித்தி செய்பவளும் கருணைக்கிருப்பிடமாயும் உலகெலாம் புகழுபவளுமான இலட்சுமிதேவியைச் சரணமடைகின்றேன்.

श्रीशय्यालयस्थेश्वराय नमः ॥

क्लृप्ते महार्हैर्मणिभिः सुवर्णप्रकाशमाने भवने विमाने ।
पट्टेन वीते शयने शयानावम्बामहेशौ शरणं प्रपद्ये ॥

15. விலைமதிக்கவியலாத ரத்தினங்களால் இழைக்கப்பட்டுச் சொர்ண மயமாயிருக்கும் தனதந்தப்புரத்திலிராநின்ற பள்ளியறையிற் பட்டுக்கள் விரித்த சயனத்திற் பள்ளிகொள்ளும் அம்பாள், மகேச்வரரிருவரையும் சரணமடைகின்றேன்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg



श्रीदुर्गाम्बिकायै नमः ॥

कृपालवालां रिपुजालकालां नतौघपालां गिरिशैकलोलाम् ।
पद्माधिसद्मप्रविजितृवक्त्रां दुर्गाम्बिकां तां शरणं प्रपद्ये ॥

16. கருணைக்கு பாத்திக்கட்டுபோல் தங்குமிடமும் சத்ருக்களுக்கு இயமனும், மெய்யன்பர்களைக்காப் பாற்றுகிறவளும், ஈசுவரனிடத்திலாவலுள்ளவளும் இலட்சுமியின் பீடமான தாமரைப்புஷ்பத்தினை ஜயிக்கும் முகவிலாசமுள்ளவளும் தேவீ மாகாத்மிய பிரதிபாத்யமான துர்காதேவியைச் சரணமடைகின்றேன்.

श्रीचण्डिकेश्वराय नमः ॥

देवापराद्धाय समात्तकोपं पित्रेऽपि संपूजितचन्द्रचूडम् ।
ईशाश्रितेभ्यः फलमर्पयन्तं चण्डेश्वरं तं शरणं प्रपद्ये ॥

17. தெய்வகுற்றஞ்செய்த தன் பிதாவிடத்திலும் கோபம் கொண்டவரும், ஈசுவரனை ஆராதிப்பவரும் தொண்டர்களுக்குச் சிவதரிசன பலனைக் கொடுப்பவரும் பெரியபுராண ப்ரதிபாத்யருமான சண்டேசுவரரைச் சரணமடைகின்றேன்.

श्रीभैरवाय नमः ॥

निशाचरेभ्यः परिपालयन्तं जगत् त्रिशूलं दधतं करेण ॥
तं भैरवं नित्यमधिष्ठितश्वं कालीप्रियं सच्छरणं प्रपद्ये ॥

इति नित्यानुसंधानं संपूर्णम् ॥

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation Ja



18. உலகத்தைப் பிசாச பயத்தினின்றும் இரவிற் பாதுகாப்பவரும், கையிற்றிருசூலம் தரித்தவரும், சுணங்கன்மீது ஆரோகணித்தவரும், பத்திர காளிக்கு இறைவனும், ஸாது ஸகாயனுமான பைரவரைச் சரணமடைகின்றேன்.

---

## ॥ नागतीर्थध्यानम् ॥

वियच्चरविलासिनीविधिकृतावगाहच्युत-
प्रगन्धिकवरीधृतामरतरुप्रसूनौघकम् ।
अघापहरवारिकं सुरसरित्समत्वप्राभवं
मुदे भवतु नागराट्कृतसुतीर्थमर्थप्रदम् ॥

தேவப்பெண்கள் முறைப்படி ஸ்நானம் செய்யும் சமயம் நறுமணமுள்ள கூந்தலிலிருந்து நழுவிவிழுந்த கற்பகமலர்க் குவியல்களை உடையதும் பாபத்தை அகற்றும் புண்ய தீர்த்தமுள்ளதும், கங்கைக்கொப்பான மஹிமைபெற்றதும் நாகராஜரால் நிர்மாணம் செய்யப்பட்ட ஸ்ரீ நாகதீர்த்தம் தனத்தைக் கொடுத்து களிக்கச்செய்யட்டும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Saray [...] S-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

## सौन्दर्यदेवीध्यानम् ।

महाघनधनप्रदां महितसज्जनाराधितां
महाधनिकवैश्यसन्मणिसुवर्णगेहस्थिताम् ।
महार्घमणिभूषणामनुपमाम्बिकेत्याख्यकां
शिवां शिवमुपैमि तं शिवदशेट्टिनाड्भासगाम् ॥

அதிக தனம் கொடுப்பவளும் பெரியோர்களால் பூஜிக்கப்பெற்றவளும் மஹா தனிகர்களான வைச்யர்கள் திருப்பணி செய்த ஸ்வர்ண ரத்னமயமான ஆலயத்தில் வீற்றிருப்பவளும், விலைபெற்ற திருவாபரணம் தரித்தவளும், ஒப்பிலாவம்பிகையென்ற திருநாமம் பெற்று செட்டிநாட்டை மங்களகரமாக வைத்த ஸ்வாமி அம்பாளை தியானிக்கிறேன்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25 | 7 | धारयंश्च | धारयन्सं |
| 29 | 19 | चर्मोपात्तो | त्वक्चोपात्तो |
| 40 | 10 | स्तुन्वन् | प्रीणन् |

---

## " सुन्दररामायणम् "

" ஸுந்தரராமாயணம் "

இது வால்மீகி ராமாயணத்தின் சுருக்கம்.

(பல விஷயங்களுடன் கூடியது)

விலை ரூ. 3—0—0

கிடைக்குமிடம் :

ஸ்ரீ ஸுந்தரேச சாஸ்திரிகள்,
நேமத்தான்பட்டி,
(Via) கானாடுகாத்தான்,
(Ramnad Dt.,)

---

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry